விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

பொதுசன நூலகம்

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 08 வெள்ளிக்கிழமை (20.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063




# மக்கள் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும்

## ஐ.நா. வலியுறுத்தல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறும் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாக குற்றஞ்சாட்டியுள்ளதுடன் மோதல்களின் போது உயிரிழப்புக்களைத் தவிர்க்குமாறு இராணுவத்தினரையும் கேட்டுக் கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் மனிதாபிமான விடயங்களுக்கான இணைப்பாளர் ஜோன் ஹோம்ஸ் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)



ஷெல் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மக்கள்

## வன்னியில் அகோர ஷெல் வீச்சு நேற்று 46 பேர் உயிரிழப்பு

### 126 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் நேற்று அதிகாலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அகோர எறிகணைத் தாக்குதல்களில் 46 பொது மக்கள் உயிரிழந்துள்ளதுடன் 126 பேர் காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணி தொடக்கம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் 24 பேர் உயிரிழந்தனர்.

இவர்களின் உடலங்கள் உறவினர்களால் அந்தந்த இடங்களிலேயே அடக்கம் செய்யப்பட்டன.

இரணைப்பாலை, ஆனந்தபுரம், வலைஞர்மடம் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 10 பேர் உயி ரிழந்துள்ளதுடன் 70க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

நா.சிவகுமார் (வயது 29), க.பாலசுந்தரம் (வயது 45), (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது. கப்பல் சேவை மீள இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## மின்சாரம் நாளை தடைப்படும்

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப்பின்னலில் அவசர திருத்தவேலைகள் மேற்கொள் (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர்-புலிகள் புதுக்குடியிருப்பில் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் இரு தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. மோதல்களை அடுத்து படையினரால் நடத்தப்பட்ட சோதனையின்போது விடுதலைப் புலி உறுப்பினர்களின் 8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் பாதுகாப்புக்கு உடனடிப் போர் நிறுத்தம் அவசியம்

### நடேசன் பி.பி.சிக்குப் பேட்டி



(லண்டன்)

வன்னியிலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உடனடியாக போர் நிறுத்தம் ஏற்படுத்த வேண்டும். இதற்கு சர்வதேசமும் இந்தியாவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கேட்டு வருகின்றனர்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் கூறியுள்ளார். லண்டன் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலின் விபரம் வருமாறு, (12ஆம் பக்கம் பார்க்க)

## சுப்பிரமணிய சுவாமி விவகாரம்

## சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள்-பொலிஸார் மோதல்

(சென்னை)

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்று மாலை சட்டத்தரணிகளும் பொலிஸாரும் கடுமையாக மோதிக்கொண்டனர். இதில் பலர் காயமடைந்தனர். வளாகத்தில் இருந்த வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. பொலிஸார் தடியடி நடத்தி வக்கீல்களை விரட்டினர். ஆத்திரமுற்ற சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்தில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தீ வைத்தனர். இதனையடுத்து நீதிமன்ற வளாகம் போர்க்களமாக மாறியது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, சிதம்பரம் கோயில் தொடர்பான வழக்கில் ஆஜராக வந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தின் பகுதிகள் வட்டக்கச்சியில் மீட்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு வட்டக்கட்சி பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் விடுதலைப்புலிகளினது விமானங்களின் சில பகுதிகளைக் கண்டுபிடித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விமானத்துக்குரிய சில உதிரிப்பாகங்கள் தப்பியோடிய புலிகளால் தீயிட்டு எரிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆப்பு வைக்கும் இலங்கை அரசாங்கம்

## ஆய்வாளர் உப்புல் ஜோசப் பெர்னான்டோ விபரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையை சாதகமாகப் பயன்படுத்த வெளிநாடுகள் எடுக்கும் முயற்சிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமக்குச் சாதமாகக் கையாண்டிருப்பதாக அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சினையைத் தமது சொந்த அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்த இந்தியாவும், பிரித்தானியாவும் எடுத்த முயற்சிகளை இலங்கை அரசாங்கம் தமக்குச் சாதகமாகக் கையாண்டிருப்பதாக அரசியல் ஆய்வாளரான உப்புல் ஜோசப் பெர்னான்டோ குறிப்பிடுகிறார்.

பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுண், இலங்கையின் மனிதநேய நிலைமை களைக் கண்காணித்து இறுதி சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பிரித்தானிய நாடாளு மன்ற உறுப்பினர் டெஸ் பிரவுணை இலங்கைக்கான விசேட பிரதிநிதியாக நியமித்தார். ஆனால் கோர்டன் பிறவுணின் இந்த நியமனத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராக மெக்சிக்கோ கொண்டு வரவிருந்த தீர்மானத்தை பிரித்தானியாவும், ரஷ்யாவும் நிராகரித்திருந்தன.

இலங்கை அரசாங்கப் படைகள் பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே மோதல்களை முன்னெடுத் திருப்பதாக பாதுகாப்புச் சபையிடம் சுட்டிக் காட்டிய பிரித்தானியா, சூடானில் முன்னெடுக்கப்படும் மோதல்களையும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் மோதல்களையும் ஒன்றாக நோக்க முடியாதெனக் கூறியது. இது இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் செயலெனவும் சுட்டிக்காட்டியிருந்தது.

ஐ.நா.பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்று ஒரு வாரகாலத்துக்குள் பிரித்தானியாப் பிரதமர் இலங்கைக்கான விசேட பிரதிநிதியை நியமித்தார். எனினும் பிரித்தானியப் பிரதமரின் இந்த நியமனம் இலங்கையின் இறைமையை மீறும் செயல் ஒன்றெனக் கூறி கொழும்பு நிராகரித்தது.

ஆண்டாண்டு காலமாகப் பதவிக்கு வந்த பிரித்தானியப் பிரதமர்கள் பல்வேறு நாடுகளுக்கு விசேட பிரதிநிதிகளை நியமித்த போதும் ஒரு நாடு பிரித்தானியாவின் நியமனத்தை நிராகரித்தது இதுவே முதல்தடவையெனப் பிரித்தானிய ஊடகங்கள் கூறுகின்றன.

இலங்கையின் இந்தச் செயற்பாடானது கோர்டன் பிறவுணுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிடும் பிரித்தானிய ஊடகங்கள் 24 மணித்தியாலங்கள் மாத்திரம் பதவியிலிருந்த விசேட பிரதிநிதி எனக் கிண்டல் செய்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையில் பேச்சுவார்த்தைக்கு எதிராகவும் மோதலுக்கு ஆதரவாகவும் பேசிய பிரித்தானியா தனது நாட்டிலுள்ள புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தம்மை சமாதான விரும்பிகளாகக் காண்பிக்க முயற்சிப்பதாக உபுல் யோசப் பெர்னான்டோ குறிப்பிடுகிறார்.

பிரித்தானியாவைப் போன்றதொரு நிலையே அயல் நாடான இந்தியாவுக்கும் ஏற்பட்டதாகக் குறிப்பிடும் அவர், தமிழகக் கட்சிகளின் வற்புறுத்தலுக்காக இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென இலங்கை அரசாங்கத்திடம் இந்திய காங்கிரஸ் அரசு கோரிக்கை விடுத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

ஆனாலும் மோதல்கள் முடிபடைந்த பின்னரே அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் திட்டவட்டமாகக் கூறியதால் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் சூழ்நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு இந்திய காங்கிரஸ் அரசாங்கத்தையும் பிரித்தானிய அரசாங்கத்தையும் பயன்படுத்திக் கொண்ட இலங்கை, அரசியல் தீர்வை முன்வைப்பதே தமது நிலைப்பாடு என்பதையும் தெளிவுபடுத்தியிருப்பதாக உபுல் ஜோசப் பெர்னான்டோ கூறுகிறார்.

வெளிநாடுகள் போருக்கு உதவிசெய்தால் போதும். அதற்கும் அப்பால் செல்வது அநாவசியம் என்பதை இலங்கை மறை முகமாகத் தெரிவித்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிடுகிறார். (ச-5)

## இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு 10 லொறிகளில் உணவுப் பொருட்கள்

### உலக் உணவுத்திட்டம் வழங்கியது

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்துள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு உலக உணவுத்திட்டம் 10 லொறி உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

இந்த உலர் உணவுப் பொருட்களைக் கொண்டு இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் குழுக்கள் அமைத்து பொதுச் சமையல் மூலமாக உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையில் அண்மையில் வவுனியா செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நூறு பேர் கொண்ட குழுக்களைப் பிரித்து அவர்களுக்கு சமைப்பதற்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் உலர் உணவுப் பொருட்கள் என்பவற்றை வழங்குவதற்கு உலக உணவுத்திட்டம் மற்றும் யுனிசெவ் போன்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. ஏனைய தேவையான மரக்கறி வகைகள் மற்றும் அவசியமான பொருட்களை மீள்குடி யேற்ற அமைச்சின் ஊடாக அரசாங்கம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய நடவடிக்கையின் மூலம் சமைத்த உணவு வழங்கும்போது எதிர்நோக்கப்பட்டு வந்த பல்வேறு குறைபாடுகள் பிரச்சினைகள் தீர்வதற்கு வழியேற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இடம் பெயர்ந்த மக்களுக்குத் தரமான உணவு கிடைக்கும் என்றும் நம்பப்படுகின்றது. (ச-5)

## தொழில் நுட்ப ஆலோசகர் பதவியை நிராகரித்தார் நாராயணமூர்த்தி!

(சென்னை)

இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப ஆலோசகராகுமாறு விடுத்த வேண்டுகோளை இந்தியாவின் இன்போஃசிஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவரும் ஆலோசகருமான என்.ஆர்.நாராயணமூர்த்தி நிராகரித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக நாராயணமூர்த்தியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார். எனினும் தனிப்பட்ட காரணங்களுக்காக இதிலிருந்து தான் விலகிக்கொள்வதாக நாராயணமூர்த்தி ஜனாதிபதிக்கு கடிதம்மூலம் அறிவித்துள்ளார்.

எனது அண்மைய இலங்கை விஜயத்தின் போது சிறப்பான முறையில் உபசரித்தமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தனிப்பட்ட காரணங்களுக்காக உங்கள் அரசாங்கத்தின் தொழில்நுட்ப ஆலோ சகராகக் கடமையாற்றுவதிலிருந்து விலகிக் கொள் கிறேன் என நாராயணமூர்த்தி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டை ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியதுடன் அவற்றுக்காக பல்வேறு செயற்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாகவே இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக நாராயணமூர்த்தியை இலங்கை அரசாங்கம் நியமித்தது.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களைப் படுகொலை செய்துவரும் நிலையில் இன்போஃசிஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் நாராயணமூர்த்தி, மகிந்த ராஜபக்ஷவின் தொழில்நுட்ப ஆலோசகராகச் செல்லக் கூடாதெனத் தமிழகத்தில் எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டிருந்தன.

அவ்வாறு எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டிருந்த நிலையிலேயே இலங்கை ஜனாதிபதியின் நியமனத்தை நாராயணமூர்த்தி நிராகரித்துள்ளார்.

நாராயணமூர்த்தி ஏற்கனவே தென் கொரிய ஜனாதிபதி மற்றும் மலேசியப் பிரதமர் ஆகியோருக்கு தொழில்நுட்ப ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். (ச-5)

## வேலணைக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்ட அதிபர்களுக்கு நடைபெறவிருந்த கூட்டம் 24ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெறும் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.சரவண பவானந்தன் அறிவித்துள்ளார்.

(ஓ)

## விடுதலைப் புலிகளுடன் இராணுவம் இன்னும் 18 மாதங்கள் போரிட நேரிடும்

### முரளிதரன் எம்.பி. தெரிவிப்பு

விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதற்கு இலங்கை இராணுவத்தினர் மேலும் 18 மாதங்கள் போராட வேண்டியிருக்கும் என விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தாலும் புலிகளை அழிப்பதற்கு மேலும் 18 மாதங்கள் போராட வேண்டியிருக்கும் என ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் கருணா கூறினார். புலிகள் தமது பெருமளவு நிலப்பகுதியை இழந்தாலும் தம்வசமிருக்கும் நிலப்பரப்பிலிருந்து கெரில்லா முறையிலான தாக்குதல்களை நடத்துவார்கள்.

இராணுவத்தினர் நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். வடபகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள மக்கள், களநிலைவரங்கள், எந்த எந்தப் பகுதிகள் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் போன்ற தகவல்களை இராணுவத்தினருடன் நான் பகிர்ந்து கொள்வேன் என அவர் கூறினார்.

இராணுவத்தினரின் தாக்குதல்களை எதிர்கொண்டு பதில் தாக்குதல்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளிடம் தற்பொழுது சிறந்த தலைமைத்துவம் இல்லையெனத் தனது செவ்வியில் குறிப்பிட்ட முரளிதரன் தனது வெளி யேற்றத்தால் இழக்கப்பட்ட 60 வீதமான அவர்களின் ஆட்பலம் இன்னமும் மீள் நிரப்பப்படவில்லையெனவும் கூறினார். எமக்கு ஒரு நாடு, ஒரு தலைவர் என்பதையே நான் நம்புகிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

(ச-5)

## இலங்கை மின்சார சபை

### மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப்பின்னலில் அவசர திருத்த வேலைகளைச் செய்வதற்காக நாளை 21.02.2009 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.குடாநாடு முழுவதும் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

***வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.***

**இலங்கை மின்சார சபை,**
**சுன்னாகம்.**

**மின் பொறியியலாளர்,**
**யாழ்.பிரதேசம்.**

(இ-2134)

## திறந்த பல்கலைக்கழக மீட்டல் வகுப்பு

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான மீட்டல் வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கும் எந்திரவியல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கும் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

புதிதாக கற்கை நெறிகளிற்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச-14)

## இதய அஞ்சலி



யாழ்.கலட்டி பிரபல கட்டிட ஒப்பந்தகாரர்
**திரு.பேரம்பலம்** (J.P) அவர்களின் மகன்

**சுரேந்திரரூபன் (சுரேன்)**

(Canada)

18.02.2009 அன்று இறைவனடி சேர்ந்த எம் இதய உறவு சுரேந்திரரூபன் (சுரேன்) அவர்கட்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

**68/2, பிறவுண் வீதி,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**

**உறவினர்கள்,**
**மச்சான், மச்சாள்.**

(c-2137)

# இன்று ஒரு தகவல்

## மனம் ஏமாற்றும்

ஒரு ஊரில் புகழ் பெற்ற பத்திரிகையாளர் ஒருவர் இருந்தார். அவர் திடீரென ஒருநாள் இறந்து விட்டார். அதன் பின் நேராக சொர்க்கத்துக்குப் போனார்.

சொர்க்கத்தின் வாசலில் நின்று கொண்டிருந்த ஒருவர் அவரைத் தடுத்தார்.

"இதோ பார்... ஏற்கனவே இங்கே 12 பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கே இங்கு வேலை இல்லை. அதற்கு என்ன காரணமென்றால் சொர்க்கத்தில் திடுக்கிடும் செய்திகள் எதுவும் இருப்பதில்லை.

இங்கு எல்லாமே ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது. எல்லாம் ஒழுங்காக நடப்பதால் கொலை – கொள்ளை – தீவைப்பு போன்ற சுவாரஸ்யமான செய்திகளும் இல்லை. ஏற்கனவே இங்கிருப்பவர்கள் எல்லோரும் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு தியானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரே செய்திதான் தினமும் இங்கு வந்துகொண்டிருக்கிறது.

அதைப்படிப்பதற்கே இங்கே ஆளில்லை. அதனால் நீ நரகத்துக்குப் போ. அங்கே எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிறது.

அங்கேதான் அதிகமான பத்திரிகையாளர்கள் தேவைப்படுகிறார்கள். அங்கே உனக்கு நிறைய வேலை இருக்கும். நீயும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்" என்றார்.

இந்தப் பத்திரிகையாளர் யோசித்தார். இவருக்கு சொர்க்கத்திலேயே இருக்க வேண்டும் என்று தான் ஆசை. அதனால் அவரிடம் மெதுவாக, "ஐயா... என்னை ஒரு 24 மணி நேரம் இங்கிருப்பதற்கு அனுமதி தாருங்கள். இங்கிருக்கும் பத்திரிகையாளர்களில் சிலரை சமாதானப்படுத்தி மெதுவாக நரகத்துக்கு அனுப்பி விடுகிறேன். நான் இங்கேயே இருந்து விடுகிறேன். உங்கள் கணக்குப்படி 12 பேருக்கு மேல் இங்கே தாண்டாது" என்றார்.

அவரும், "சரி... அப்படியே உனக்கு அனுமதி தருகிறேன். ஆனால் ஒரு விஷயம்... 24 மணித்தியாலத்திற்குள் எல்லாம் நடந்தாக வேண்டும்" என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு இந்தப் பத்திரிகையாளர் உள்ளே சென்றார். திட்டம் போட்டு ஒரு புரளியைக் கிளப்பி விட்டார்.

சக பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு, "நரகத்தில் ஒரு பெரிய தினசரிப்பத்திரிகை ஆரம்பிக்க இருக்கிறார்கள். அதற்குப் பல அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். நிறைய சம்பளம் கிடைக்கும். யார் யாரெல்லாம் நரகத்திற்குப் போவதற்கு ஆசைப்படுகிறார்களோ அவர்களெல்லாம் போகலாம்!" என்று ஒரு புரளியைக் கிளப்பினார்.

பின்னர் 24 மணித்தியாலம் கழித்து வாசல் பக்கம் போனார். அங்கே இருந்தவரிடம், "எத்தனை பேர் வெளியேறினார்கள்?" என்று விசாரித்தார்.

அப்பொழுது அவர், "நீ சென்ன செய்தியைக் கேட்டதும் இங்கேயிருந்த எல்லாப் பத்திரிகையாளர்களும் நரகத்திற்குப் போய் விட்டார்கள். உள்ளே யாருமே இல்லை. அதனால் நீ வெளியே போகக்கூடாது. உள்ளேயே இருக்க வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டதும் இந்தப்பத்திரிகையாளரே குழப்பிப் போய்விட்டார். ஒருவேளை உண்மையிலேயே நரகத்தில் புதிதாக பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறார்களோ? என்று நினைத்தார்.

பின்னர், "ஐயா... என்னை விட்டு விடுங்கள். நான் நரகத்திற்கே போய்விடுகிறேன். அங்கே ஏதா விஷேஷம் இருக்க வேண்டும்.

இல்லையென்றால் இத்தனைபேரும் ஒட்டுமொத்தமாக அங்கே போயிருக்க மாட்டார்கள். என்னைத் தடுக்காதீர்கள் என்று கெஞ்ச ஆரம்பித்தார்.

மற்றவர்கள் நம்புவதற்காக ஒரு புரளியைக் கிளப்பி விட்டவர் கடைசியில் தானே அந்த புரளிக்கு ஆளாகிவிட்டார். அதாவது பிறரை ஏமாற்றிய அவரது மனம் கடைசியில் அவரையே ஏமாற்ற ஆரம்பித்துவிட்டது.

நீங்கள் இப்படி பிறரை ஏமாற்ற உங்கள் மனதை பழக்கப்படுத்துகிறீர்கள்... ஆனால் கடைசியில் அதனால் நீங்களே ஏமாற்றப்படுகிறீர்கள். அதனால் உங்கள் மனத் திடம் மிகவும் எச்சரிக்கையாகவே இருங்கள் – என்கிறார் ஓஷோ என்ற அறிஞர்.

நம்மவர்கள் பேய் இருக்கிறது. பிசாசு இருக்கிறது என்று புரளியைக் கிளப்பிவிடுவதுண்டு.

இருட்டு நேரம் காட்டு வழியாக ஒருவன் போய்க்கொண்டிருந்தான். அங்கே பேய் – பிசாசு நடமாட்டம் இருப்பதாக வதந்தி. இவன் பயந்து கொண்டே வேகமாகப் போனான். காடு முடிந்து பிரதான வீதிக்கு வந்து சேர்ந்தான்.

ஒரு பஸ் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ஓடிப்போய் உள்ளே ஏறி இருந்தான். அதன் பின்னர் தான் தெரிந்தது உள்ளே யாருமே இல்லை என்பது டிரைவரும் இல்லை. நடத்துனரும் இல்லை. இவனுக்குப் பேய்ப்பயம் அதிகமாகிவிட்டது. இந்த நேரம் பார்த்து அந்த பஸ், தானாக நகர ஆரம்பித்தது. இவனது உடம்பு முழுவதும் நடுங்கத் தொடங்கியது. கத்தலாமா என்று பார்த்தான்.

அந்த நேரம் பார்த்து அவன் தோலில் ஒரு கை விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே டிரைவர் நிற்கிறார்.

"யோவ்! ஏற்கனவே பஸ் பிறேக் டவுண்... நாங்களெல்லாம் பின்னால் இறங்கி நின்று தள்ளிக் கொண்டிருக்கிறோம். நீ மட்டும் ஜாலியாக ஏறி உட்கார்ந்து விட்டாயா? இறங்கி வா.. தள்ளலாம்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு 27ஆம், 28ஆம் திகதிகளில் கொழும்பில்

(கொழும்பு)

சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது, வலய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார, அரசியல் மற்றும் ஏனைய தொடர்புகள் குறித்து விரிவாக சார்க நாடுகளிடையே கலந்துரையாடப்படும் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

தற்போதைய சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் தலைவராக அமைச்சர் போகொல்லாகம செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது, வடக்கின் நிலைமை மற்றும் பாதிக்கப்பட்டுள்ள சிவிலியன்களுக்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு திக்க முனை விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் ச. திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்னாள் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராஜா கலந்து கொள்வதுடன் பரிசில்களை திருமதி. சிவனேஸ்வரி தியாகராஜா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-19)

## இராசி பலன்

*20.02.2009*
*(மாசி 8, வெள்ளிக்கிழமை)*
*ஏகாதசி பின்னிரவு 1.24 மணிவரை*
*மூலம் முற்பகல் 11.28 மணிவரை*
*இராகுகாலம் 11.01 - 12.31 மணிவரை*
*சுபநேரம் 6.31-8.01 மணிவரை*
*இராமகிருஷ்ண பரம ஹம்சர் பிறந்ததினம், ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, திடீர் பயணம், முயற்சி தாமதம். |
| இடபம் | எதிரிகளால் தொல்லை, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, வாகன பயம். |
| மிதுனம் | காரிய சித்தி, சென்ற இடத்தில் செல்வாக்கு, போசனநன்மை, தனலாபம். |
| கடகம் | சுவாரஸ்யம், நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், தொழில் விருத்தி. |
| சிங்கம் | அஜீரணக் கோளாறு, தாழ்ந்த சுபாவம், பணக்குறைவு, முயற்சி தாமதம். |
| கன்னி | தாய்வழி உறவு, மனச்சோர்வு, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| துலாம் | கூட்டு முயற்சி, கீர்த்தி, மனோ தைரியம், தனலாபம். |
| விருச்சிகம் | வேலைச்சுமை, முயற்சி தாமதம், தனவிரயம், குடும்ப கவலை. |
| தனுசு | தெய்வதரிசனம், நல்லமுயற்சி, நண்பர்கள் உதவி, விருந்து பசாரம். |
| மகரம் | பிரயாணம், சயன சுகக்குறைவு, வீண்பகை, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | எதிர்பாராத நன்மை, உஷ்ண நிலை, பொருள் சேர்க்கை, கீர்த்தி. |
| மீனம் | சுபநிகழ்வு, தன்னம்பிக்கை, தனலாபம், முயற்சி கைகூடும். |

வளவன்

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முதலாமாண்டு இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதலாமாண்டு இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக அதிபர் திருமதி மலர் சின்னையா அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் ஆசிரிய மாணவர்கள் இன்று முதல் கலாசாலை விளம்பரப் பலகையில் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


அத்துடன் நூன சித்தி பெற்ற ஆசிரிய மாணவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிர்வாகத்துடன் இன்று தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ள அதிபர், தவறின் மீள் பரீட்சைக்கு தோற்ற முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)




உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி. ஷிராணி மில்ஷிடமிருந்து கல்லூரி மாணவி செல்வி அபிராமி கனகசபை பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம்.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 130 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 |
| தக்காளி | 60 | 110 |
| அவரை | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 |
| கோவா | 40 | 70 |
| கரட் | 50 | 70 |
| பூசணி | 20 | 50 |
| புடோல் | 40 | 80 |
| வாழைக்காய் | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 25 | 40 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 70 |
| கரணைக் கிழங்கு | 25 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 |
| போஞ்சி | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |





இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய மஞ்சத் திருவிழாவின்போது சுவாமி வெளிவீதி உலாவருதலையும், மஞ்சத்தில் பவனி வருவதையும் படங்களில் காணலாம்.

## நூலகங்களில் சிறுவர்களை இணைத்துக்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களின் சிறுவர் பகுதிக்கு 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அங்கத்துவப் பணமின்றி இலவசமாக இணைவதற்கு வசதிசெய்யப்பட்டுள்ளது.

இப் பிரதேச சிறுவர்கள் நூலகங்களுடன் தொடர்புகொண்டு பயன்பெறுமாறு நல்லூர் பிரதேசசபை செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## பரிசளிப்பு விழா

(கோண்டாவில்)

யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகம் கடந்த வருடம் நடாத்திய பொது அறிவுப் பரீட்சை தேடல்–IIக்கான பரிசளிப்பு விழா கழக தலையங்கத்தில் நாளை சனிக்கிழமை 9.30 க்கு நடைபெறும்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கடிதம் மூலம் அழைப்பிதழ்கள் மற்றும் விடைத்தாள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (ஓ-36)




## பாடசாலை அபிவிருத்தி சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பாடசாலை அபிவிருத்தி சபை பொதுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இச் சபையின் தலைவராக அதிபர், திருமதி க.பொன்னம்பலம், செயலாளராக க.கனகரத்தினம் பொருளாளராக திருமதி கெளரி சண்முகலிங்கன் ஆகியோரும் நிர்வாக சபையில் ஆறு ஆசிரியர்களும் ஐந்து பெற்றோர்களும் உட்பட பதினாறு நிர்வாக அங்கத்தவர்களைக் கொண்ட சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வாளராக திருமதி குஞ்சிதபாதம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஓ-136)

## சித்த வைத்திய நூலகத்திற்கான நூல்களை வழங்க கோரிக்கை

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் இலவச சித்த வைத்தியசாலையில் சித்த வைத்திய நூலகம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந் நூலகத்திற்கு தேவையான நூல்களை வழங்குமாறு வைத்தியர் கேட்டுள்ளார். குறிப்பாக அரிய நூல்களை வைத்திருக்கும் பரம்பரை வைத்தியர்கள் நூல்களை தரும் பட்சத்தில் அவற்றை போட்டோ பிரதி எடுத்தோ அல்லது இறுவட்டுக்கள் வடிவிலோ பேண முடியும் ஆதலால் நூல்களை வழங்கி உதவுமாறு வைத்தியர் கே.நடேசராசன் கேட்டுள்ளார். (ஓ-36)

# கைதடி சைவச் சிறுவர் இல்லம்

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது பாவனையில் இல்லாது கைவிடப்பட்ட நிலையில் உள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லக் கட்டடம் சமீபத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு வருகின்ற உள்ளூரில் இடம் பெயர்ந்தோருக்குத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக யாழ்.மாவட்டச் செயலகத்தின் மேற்பார்வையில் தென்மராட்சி பிரதேச செயலரினால் பொறுப்பேற்கப்படவிருக்கின்றது. இது விடயமாக ஏதாவது தொடர்புகொள்ள விரும்புபவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார்கள்.

தொலைபேசி இலக்கம் -021 2222235
தொலைநகல் இலக்கம்-021 2222355
மின்னஞ்சல் முகவரி:-
gajaffna@ sltnet.lk
கடித விலாசம்-மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம். (ஓ)

# தொலைக்காட்சிப் பாவனையே குடாநாட்டு கல்வித்தர வீழ்ச்சிக்கு பிரதான காரணம்

## வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் த.நடராஜா தெரிவிப்பு

(கோப்பாய்)


"குப்பி விளக்கில் படித்த போது குடாநாட்டு மாணவர்கள் நிலைநாட்டிய கல்விச் சாதனைகள் மின்சார வசதி உள்ள இன்றைய காலகட்டத்தில் ஈட்டப்படாமல் இருக்கின்றமை மனவேதனையளிக்கின்ற விடயமாக இருக்கின்றது" இவ்வாறு கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலி.கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் த.நடராஜா தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் "தொலைக்காட்சிப் பாவனையே குடாநாட்டின் கல்வித்தர வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக விளங்குகின்றது. நவீன தொழில்நுட்ப சாதனப் பெருக்கத்தை மாணவர்கள் பயனுள்ள வகையில் கையாள்வதே அவற்றிலிருந்தான சாதகமான பயன்பாட்டிற்கு வழிகோலும்.

இன்று மாணவர்களுடைய கைகளிலும் கைத்தொலைபேசி காணப்படுகின்றது.

ஆனால் இதன் பயன்பாட்டை, தனது ஆளுமை வளர்ச்சிக்காகக் கையாள்வோரது எண்ணிக்கை குறைவாகவே இருக்கின்றது. வீணான பொழுதுபோக்குச் சாதனமாக இது விளங்குவது,வேதனைக்குரிய விடயமாகும்.

குடாநாட்டு மக்களின் அழியாத செல்வம் கல்வி ஒன்றே ஆகும்.



குடாநாட்டின் கல்விச் செல்வ இருப்புக்குச் சவால் விடுக்கும் வகையிலான பாவனைப் பொருட்கள் இன்று இளையோர் மத்தியில் புழக்கத்தில் உள்ளன.

இவற்றுள் தக்கது எது? தகாதது எது? என இனங்கண்டு இளையோரை ஆற்றுப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களதும் பெற்றோர்களதும் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை கோப்பாய்க் கோட்டத்தில் தனியான கவன ஈர்ப்பைப் பெற்றுவரும் பாடசாலை என்ற நிலையை எய்தியிருக்கிறது. ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாடசாலை ஆலயச் சமூகத்தினரும் ஒன்றிணைந்து உழைப்பதே இப் பாடசாலையின் வெற்றிக்கான பிரதான காரணமாகும்.

இதனாலேயே இந்த ஆண்டுக்கான தரம் ஒன்று வகுப்பில் அதிக மாணவர்கள் இங்கு அனுமதி பெற்றுள்ளனர்.

எனவே எந்த ஒரு நிறுவனத்தினதும் வெற்றிக்குக் கூட்டுழைப்பு இன்றியமையாதது என்றார். (ஓ)

## சேவைநலன் பாராட்டு விழா

(வட்டுக்கோட்டை)

வட்டு.சுப்பிரமணிய வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் மா.செல்வராசாவின் சேவைநலன் பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.திருக்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சேவை நயப்புரையை வித்தியாசாலை மாணவர், பெற்றோர், பழைய மாணவர், நிறுவுனர் குடும்பம் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் சிறப்பு நயப்புரையை சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும் ஆற்றவுள்ளனர். (ஓ-2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 174 ஆவது ஜன்மதினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 174 ஆவது ஜன்மதினம் இம்மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் விசேட பூஜையும், அதனைத் தொடர்ந்து பிரசாதம் வழங்கலும் இடம்பெறும். அன்பர்கள் அனைவரையும் கலந்து குருதேவரின் இன்னருளுக்கு பாத்திரமாகுமாறு சுவாமி சித்ரூபானந்தா கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## சாரணர் சங்க ஸ்தாபகர் விழா

(அல்வாய்)

பருத்தித்துறை மாவட்டம் இலங்கை சாரணர் சங்க ஸ்தாபகர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பரு.பிரதேச செயலரும், பரு.மாவட்ட சாரணர் கிளைச் சங்க தலைவருமான இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்,கெளரவ விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன் றாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-19)

## வாராந்த சொற்பொழிவு

(நல்லூர்)

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபையின் ஆதரவில் வாராந்தம் இடம்பெறும் சொற்பொழிவுத் தொடரில் எதிர் வரும் 27 ஆம்திக்தி வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு சிவலிங்கயோகேந்திர நிலையத்தின் செயலாளர் சிவ. உமாசுதன், 'தமிழ்க் கடவுள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஓ-18)

## சட்டவிரோத மின்னிணைப்பு பெற்ற 7பேர் கைதாகினர்

(சாவகச்சேரி)

சட்டவிரோத மின் இணைப்புப் பெற்ற 5 பெண்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

தென்மராட்சி மந்துவில் பகுதியில் சாவகச்சேரி பொலிஸாரும் மின்சார சபையினரும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய திடீர் பரிசோதனையிலேயே இவர்கள் கைதாகினர்.சட்டவிரோத மின்சாரம் பெறப் பயன்படுத்திய பொருட்களும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-29)

## கலாசாரப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் 2009 ஆம் ஆண்டுக்கான கலாசாரப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இருப்பினும் கடந்த வருடம் யூன், யூலை மாதங்களில் நடாத்தப்பட்ட போட்டிகளின் சில முடிவுகள் போட்டியாளர்களுக்கு அறிவிக்கப்படவுமில்லை. பரிசளிப்பும் இடம்பெறவில்லை.

இவ்விடயம் தொடர்பாக மன்றத்தினரை கேட்டபோது, சில போட்டிகளின் முடிவுகள் கொழும்பிலிருந்து கிடைக்கப்பெறவில்லை; மேலும் நிதிப் பிரச்சினைகளால் பரிசளிப்பு விழாவும் நடைபெறவில்லை. இவ் விடயங்கள் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் கடந்த வருடத்திற்குரிய பரிசில்களையும் சேர்த்து இவ் வருட பரிசளிப்பு விழாவில் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இவ் வருடமும் அதிகளவான போட்டியாளர்கள் கலந்துகொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்வதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவித்துள்ளது. (ஓ-36)

# இலங்கையில் தமிழர் 76

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

ஆந்திரப் பிரதேசத்தில், சிறப்பாக நாகர் ஜுனக் கொண்டா மற்றும் அமராவதி ஆகிய இடங்களில், பௌத்தம் பொ.ஆ.மு. காலத்திலிருந்தே வளர்ச்சிபெற்று பொ.ஆ.மூன்றாம் நாலாம் நூற்றாண்டுகளில் உச்ச நிலையடைந்திருந்தது. தமிழ்நாட்டில் பொ.ஆ.மு. காலத்தில் பௌத்தம் சமணமும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும், பொ.ஆ.மூன்றாம் நூற்றாண்டின் பின்னரே அவை பெரிதும் வளர்ச்சியுற்றன. காஞ்சி, மதுரை, உறையூர் மற்றும் காவிரிப்பூம் பட்டினம் ஆகிய இடங்களில் இச் சமயங்கள் சிறப்புற்ற மையங்களாக எழுந்தன.

இவ்விடங்களில் பாளி மொழி வளர்ச்சிக்கு உதவிய மையங்களாகவும் அமைந்தன. இக்காலப் பகுதியில் தமிழ்நாடு தனது தலைசிறந்த அறிஞர்களைப் பௌத்த உலகுக்கு அளித்துப் பௌத்த மத வளர்ச்சிக்கு உதவியது. இக் காலப்பகுதிலேயே பிரசித்தி பெற்ற தமிழ்ப் பௌத்த காவியங்களாகிய மணிமேகலையும் குண்டலகேசியுடம் படைக்கப்பட்டன. அவற்றைப் போன்று தமிழ்ச் சமண காவியமாகிய சிலப்பதிகாரமும் இக்காலத்தில் படைக்கப்பட்டதே. கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலை ஆகியவற்றைப் பொறுத்து ஆந்திரப் பிரதேசத்தில் பௌத்த கட்டடக் கலை, சிற்பக்கலை சிறப்பான வளர்சி பெற்று இலங்கையிலும் தென் கிழக்காசியாவிலும் செல்வாக்குப் பெற்றன.

**பொருளியல் காரணிகள் - தென்னிந்திய வணிக கணங்கள்**

ஆறாம் நூற்றாண்டின் பின் இலங்கையில் தமிழ் இனக்குழுவின் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியத்துவம் பெறும் ஒரு பொருளியல் காரணி தென்னிந்திய வணிக கணங்களின் எழுச்சியாகும். பல்லவப் பேரரசின் வளர்ச்சியுடன் கடல் வணிகம் துரிதமாக வளர்ச்சி பெறத் தொடங்கியது.

இதன் விளைவாக முன்னர் இல்லாத அளவுக்கு வர்த்தக நடவடிக்கைகளில் தென்னிந்திய வணிகர்கள் ஈடுபட்டதன் விளைவாகத் தென்கிழக்காசியாவுடன் மேற்காசியாவுடனும் நெருங்கிய வர்த்தக உறவுகள் ஏற்பட்டதுடன், வலிமை வாய்ந்த வணிக கணங்களும் தோன்றின. இவை இலங்கையிலும் முக்கிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

**நீர்ப்பாசனவியல் வளர்ச்சி**

இக் காலப் பகுதியில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் மிகவும் வளர்ச்சி பெற்ற ஒரு துறையாகக் காணப்படுவது நீர்ப்பாசனவியல் துறையாகும். பொ.ஆ.மு. நூற்றாண்டுகளில் சிறிய அளவில் குளங்கள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றை அமைத்து விவசாயம் நடத்திய நிலையிலிருந்து படிப்படியாகப் பெரும் குளங்கள், அணைகள் மற்றும் நீண்ட கால்வாய்கள் ஆகியவற்றை அமைக்கும் அளவுக்கு இக் காலப் பகுதியில் நீர்ப்பாசனம் தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தில் ஒரு பொது வளர்ச்சியாகக் காணப்பட்டது.

இத்தகைய வளர்ச்சிக்குத் தென்னிந்தியத் தொழில்நுட்பமும் இலங்கைத் தொழில்நுட்பமும் கருத் துப் பரிமாறலில் ஈடுபட்டதுடன் இரு நிலப் பகுதிகளிலிருந்து வேலையாட்களும் விற் பன்னர்களும் சென்று வந்தனர் என்று கொள்ள முடியும். இதன் ஒரு விளைவு இலங் கையில் வளர்ச்சி பெற்ற தமிழ் இனக்குழு மேலும் வலுப் பெற்றமையாகும்.

**அனுராதபுர அரசில் தமிழர் ஆட்சி**


ஏழாம் நூற்றாண்டில் பல்லவ அரசும் பாண்டிய அரசும் எழுச்சி பெறும் வரை இலங்கையின் அரசியல் தென்னியந்திய அரசியற் சம்பவங்களினால் பாரதூரமாகப் பாதிக்கப்படவில்லை. முன்னர்போல, தமிழ் நாட்டிலிருந்து சிலர் படையெடுத்து வந்த அனுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றினர். அனுராதபுரத்திலிருந்து சிலர் தென்னிந்தியாவுக்குச் சென்று படை திரட்டி வந்து ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர்.

பொ.ஆ.300 க்கும் 900க்கும் இடையில் குறைந்தது ஒன்பது தடவையாவது இவ்வாறு அனுராதபுரத்து இள வரசர்கள் தென்னிந்தியாவுக்கு உதவி பெறச் சென்று படைகளுடன் வந்தனர் எனப் பாளி வரலாற்று நூல்கள் வாயிலாக அறியலாம்.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இவை மட்டுமின்றி, தமிழ் நாட்டு அரச குடும்பங்களில் சில சிங்கள அரசர்கள் மணமுடித்து அரசியரை அழைத்திருந்தனர் என்றும் அறிய முடிகின்றது.

இத்தகைய அரசியல் தொடர் புகள் அனுராதபுரத்தில் இருந்த தமிழர் செல்வாக்குத் தொடர்ந்தும் வலுவுடன் இருக்க உதவின. (தொடரும்)





இலங்கை வங்கி வல்வெட்டித்துறை விரிவாக்கற் கிளை திறப்பு விழாவில் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளரின் பாரியார் திருமதி நளினி சிவரட்ணம் நாடாவெட்டி திறந்து வைப்பதையும், அருகில் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் நிற்பதையும், வாடிக்கையாளர் வி.முருகவேலிடமிருந்து முதல்வைப்பினைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915] கல்லடி வேலனும் 15

யாழ்ப்பாணத்தில் விவசாயத் தொழில் எதிர் கொண்ட மிக முக்கியமான பிரச்சினை நீர் வளமாகும். இங்கு வாழ்ந்த விவசாயிகள் மிகவும் பிரயத்தனப்பட்டு நீர்ப் பாய்ச்சியே விவசாயம் செய்தனர். அக் காலத்தில் துலாவினால் நீர் இறைக்கும் பொறிமுறை மட்டுமே அறியப்பட்டுப் பயிலப்பட்டு வந்தது.

1910 ஆம் ஆண்டளவில் சூத்திரம் என்ற பொறிமுறை, மலாயாவில் தொழில் பெற்றுச் சென்ற ஒருவரால் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அப்பொறிமுறை பற்றி வியந்தும், அதனை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்துவரைப்பாராட்டியும் எழுதியிருந்தார்.

இவ்வியந்திரத்தைச் சோதனை பார்க்கும் நோக்கமாக, சென்ற 1905 ஆம் வருட தைமீ 13 உயன்று நம்மேசன்றுத் துரையாதியாம் பலர் சமூகத்தில் ஓர் கிணற்றிலிட்டு இறைத்துப் பார்த்தனர்... இவ்வியந்திரத்தைக் கொண்டு நாள்வீதம் முன்னேரம் பின்னேரமாகிய இரு நேரங்களிலும், 40 பரப்பு நிலத்தை மிக லேசாகவும், சுகமாகவும் இரு மாடுகளைக் கொண்டு இருவர் நீர் பாய்ச்சக்கூடும்... இறை கூடையினால் நாட்டுப்பகுதியிலுள்ளார் இறைத்து நீர்பாய்ச்சுவது மெத்தக் கஷ்டமான காரியம். மூன்று பேர் துலா மிதிக்கவும் ஒருவர் தண்ணீர் இறைக்கவும் இன்னொருவர் தண்ணீர் மாறவும் வேண்டும்.

இப்படி நீர் பாய்ச்சும் ஐவரும் ஆளுக்கு (துு) ஆயிரம் கன்றுத் தறைக்கு மேல் பயிரிட்டு இறைத்துக் கொள் வதும் கூடாத காரியம். இவ்வியந்திரத்தினால் இருமாடுகளினுதவியைக் கொண்டு எரு அணி முதலுள்ளவர்கள் ஆளுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் கன்றுத் தறையைப் பயிரிட்டுச் செய்துகொள்வது மெத்தச் சுகமான காரிய மும் நல்ல வருமானம் வருவதற்கு இடமுமா யிருக்கும்... (சு.நா. 11. 03.1907)

[illegible] வ.சி. [illegible]றயில் இருந்த போது, வெளி வந்த புததிரிகையொன்றின் தகவல்;

... இவர் நடத்த முயன்ற கிருஷிக வித்தியாசாலையால் நன்கு விளங்கும். இவ் வித்தியாசாலைக்கு பெருந்தொகையான நிலத்தையும் வாங்கி மிகவும் தீவிரமாயும் வேகமாயுந் தண்ணீர் பாய்ச்சக் கூடிய யந்திரமொன்றையுந் தருவித்து, வித்தியாசாலை ஸ்தாபனஞ் செய்யுந் தருணத்தில்..., (குருசந்திரோதயம் 25.05.1911) என்று காணப்படுவதால், க.வே. யாழ்ப்பாண விவசாய வளர்ச்சியில் கொண்டிருந்த அக்கறை தெரிகின்றது. அதாவது விவசாய வளர்ச்சியின் பொருட்டு செயன் முறை அறிவை மேம்படுத்தும் வகையில் விவசாயக் கல்விச்சாலை ஒன்றை நிறுவ ஆயத்தம் செய்திருந்தார்.

விவசாயத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த, க.வே.விவசாயிகளுக்கான பத்து விடயங்கள் அடங்கிய குறிப்பொன்றை எழுதி வெளியிட்டிருந்தார்.

பத்து விவசாயக் கற்பனைகள்;... நல்ல தானியங்களைப் பெற வேண்டுமானால் பின்வருவனவற்றைச் செய்க.

1.ஆழமாய் உழு.
2.மேல் நிலத்தைக் கட்டியில்லாமற் தட்டிவை.
3.பூமியைச்சமமாய் தட்டு.
4.முளையில்லாக் காலத்தில் நிலத்தைச் சும்மா விட்டுவை.
5.சமயத்தில் நிலத்திற்கு எருவடி.
6.புல், பூண்டுகளைக் களையெடுத்து விடு.
7.சீக்கிரம் அறுவடையாகக் கூடிய தானியங்களை நடு.
8.பச்சைத் தழையை அடி.
9.ஆடு, மாடுகளை வைத்துக்கொள்.
10.ஒரு தடவை நட்ட பயிரை அடுத்த வருஷத்தில் நடாதே. இந்தக் கட்டளைகளை ஒரு புத்திமான் இடுகிறார். (சு.நா.18.08.1911).

விவசாயத்தில் மட்டுமன்றி ஏனைய தொழிற்றுறைகளின் வளர்ச்சியிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி பெற்றிருந்த தொழிற்றுறைகளின் சுருட்டுத் தொழில் பிரதானமாகும். அக்காலத்தில் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கக் கூடிய சுருட்டுக்களின் எண்ணிகையை சுதேச நாட்டியத்தில் இடம்பெற்றிருந்த மேல்வரும் செய்தி காட்டுகின்றது.

‘ இது நூதனமா? கொழும்பு ‘முஸ்லிம் நேசன்’ பத்திரிகையில் லண்டனில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் சுருட்டு செலவழிக்கிறதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நமது நண்பர் கொழும்பில் நாளொன்றுக்கு பதினைந்து இலட்சம் யாழ்ப்பாணச் சுருட்டுகள் செலவழிந்து போவதை இன்னும் அறியவில்லைப் போலே.சீக்கரற்று, மனிலா, தும்பறையாவா, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, நீர்கொழும்பு முதலிய பல சாதிச் சுருட்டுக்களையும் சேர்த்துக் கணக்கிடில் நாளொன்றுக்கு இருபத்தைந்து இலட்சம் சுருட்டுகள் வரையிற் செலவழிக்கிறதாமே...’ (சு.நா. 9.1.1903)

அத்துடன் 1911 இல் இடம்பெற்ற சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி எழுதிய க.வே.அது பற்றிய செய்திக்கு, ‘சுருட்டுக்காரர் முரட்டுத்தனம்’ என்ற தலைப்பிட்டு எழுதியிருந்ததுடன், அவர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டதால் தம் கோரிக்கையில் வெற்றி பெற்றார்கள் எனவும் கருத்துக் கூறியிருந்தார். (சு.நா.20.03.1911)

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர். வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**அரசியல் விடயங்களில் க.வே.யும் சுதேச நாட்டியமும்**

சுதேச நாட்டியம் பத்திரிகை வெளிவந்த நீண்டகாலப் பகுதி (1902-1944) அரசியலில், பல்வேறு மாற்றங்கள் விரைவாக ஏற்பட்ட காலமாக அமைகிறது. இக்காலப் பகுதிக்குரிய அரசியல் வரலாறு, பகுப்பாய்வு செய்யப்படாத நிலையில், தனிநபர் பத்திரிகையாளர் ஒருவரின் அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவாகக் குறிப்பிடுவது, முடியாத காரியமாகும். (தொடரும்)

# நெஞ்சைப் பிழியும் மனித அவலத்தைத் தடுக்க மருத்துவ சமூகம் குரல் கொடுக்க வேண்டும்

மருத்துவர்களின் பணி மனிதநேயத்தினை சமூகத்தில் மேம்படுத்துவது ஆகும். இது ஹிப்போகிரட்டீசின் சத்தியப்பிரமாணத்தில் இருந்து இன்றுவரை பேணப்படுகின்றது. மருத்துவம் இன்று பல பிரிவுகளாக முன்னேற்றம் கண்டுள்ளது. அதனுள் சமுதாய மருத்துவத்துறையும் சிறப்பாக விருத்தி அடைந்துள்ளது. இதில் நோய் வராது வருமுன் காத்தலே முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தவகையில் வடக்கில் நடைபெறும் யுத்தத்தில் தினமும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் குறிப்பாக குழந்தைகள், பெண்கள் இறப்பதைக் கடந்த ஒரு மாதமாக பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் படங்களுடன் காண்கின்றோம்.

இச் செய்தியினைப் படிப்போர் மனநோய்க்கு உட்படுவதுடன் பலத்த உளத்தாக்கத்திற்கும் உட்படுகின்றனர். அந்தவகையில் மருத்துவர்களும் விதி விலக்கல்ல. ஆனால் எமது கடமை, குறிப்பாக சமுதாய மருத்துவத்தில் இவ்வாறான சம்பவங்களை இல்லாது செய்தல் அல்லது குறைத்தல் மிகவும் அவசியமாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் Health as a Bridge for Peace (சௌக்கியம் சமாதானத்திற்கான பாலம்) என்ற கோட்பாட்டினை சுகாதார சேவையினர் மேற்கொள்வது அவசியம்.

குறிப்பாக மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் குண்டுகள் வீசுவதைத் தடுக்க மருத்துவ சமூகம் வேண்டுகோளினை விடு[illegible]க்க வேண்டும். இலங்கையிலேயே Pethidine என்ற புண்ணிற்கு வலி தீர்க்கும் மருந்து தீர்ந்துபோனமை, ஏற்பட்ட ரண காயங்களின் அளவினைக் கோடி காட்டுகின்றது.

மனிதனை மனிதன் வதைக்கும் அநாகரிகச் செயலைத் தவிர்க்குமாறு கூறுவது கல்வி கற்ற அறிஞர்களது கடமையாகும். அன்றேல் அவர்கள் மரம் போல்வர்.

தொடர்ந்து அடுத்து தொடர்ச்சியான இடம்பெயர்வால்-கடுமையாக சமூக உளச் சித்திரவதைக்கு (Psychosocial torture) மக்கள் உட்படுகின்றனர். சமூக உளச்சித்திரவதையின்போது உணவு, நீர்வசதி, உடை, உறையுள், மலசலகூடம், கல்வி, போக்குவரத்து, தொழில்/வருமானம், பாதுகாப்பு தொடர்பாடல், மருத்துவவசதி, மதவழிபாட்டு வசதி, நோய் நிலை அற்ற நிலை என்பன திருப்தி அற்றுக் காணப்படும்.

இதனால் மனச்சோர்வு, பதகளிப்பு, மெய்ப்பாட்டு நோய், உளமாய நோய், உளத்தாக்கத்திற்கு பின்பான மனவடுநோய் என்பன ஏற்படலாம்.

மேலும் தற்கொலை, குடும்பப் பிரச்சினைகள், மது, போதைப் பொருள் பாவனை என்பன அதிகரிக்கலாம்.

எனவே சமூகத்திற்கு ஏற்படும்-ஏற்படக்கூடிய பாதகமான மருத்துவப் பிரச்சினைகளை எதிர்வுகூறி சமூக வன்மத்தினைக் குறைப்பதற்கு நல்லன செய்ய விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டியது எமது கடமையாகும்.

**வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா**


# பரத நாட்டியக் கச்சேரி முறைமை
## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பரதநாட்டிய நுண்கலைமாணி பரதநாட்டிய கலாவித்தகர் செல்வி.உமாமகேஸ்வரி உதயகுமாரின் ''பரதநாட்டியக் கச்சேரி முறைமை'' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இணுவில் பொதுசன நூலக மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக பதில் நூலகர் திருவாட்டி ஸ்ரீ காந்தலக்ஷ்மி அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய நடன ஆசிரிய ஆலோசகரும் உரும்பிராய் கலைக்கோவில் இயக்குநருமான திருமதி.பத்மினி செல்வேந்திரகுமார், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை தலைவர் திருமதி.சுகந்தினி ஸ்ரீமுரளிதரன், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை தலைவர் செல்வி.பாக்கியலட்சுமி நடராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் நூல்வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரனும், நூல் மதிப்பீட்டுரையை இராமநாதன் மகளிர் கல்லூரி பிரதி அதிபரும் நடன ஆசிரியையுமான திருமதி. நந்தினி சிவராஜனும் ஆற்றவுள்ளனர். (ஓ-2)



பருத்தித்துறை கற்கோவளம் ஸ்ரீ கும்பிமுருகன் தேவஸ்தானத்தில் தைப்பூச தினத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வில் கலந்து கொண்டோரைப் படத்தில் காணலாம்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(அல்வாய்)

வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் வித்தியாலய அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், கௌரவ விருந்தினராக வல்வை நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-19)

(அல்வாய்)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பரு. ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பரு. இலங்கை வங்கி பதவி நிலை உத்தியோகத்தர் ஜெ.அரவிந்தன், சிறப்பு விருந்தினராக பரு.ஹாட்லிக் கல்லூரியின் பகுதித் தலைவர் ந.சர்வானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை திருமதி நளாயினி அரவிந்தன் வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-19)

(யாழ்ப்பாணம்)

யா.சென்மேரிஸ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார், சிறப்பு விருந்தினராக ஜே/73 கிராமசேவையாளர் எஸ்.ஞானசேகரம் கௌரவ விருந்தினராக யாழ்.அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தை அருட்தந்தை ம.றெஜிராஜேஸ்வரன் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-14)

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ச.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-2)

(புத்தூர்)

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்க பொது முகாமையாளர் பொ.செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக வ.பி.போ.ச.வட்டாரக் கணக்காளரும் இளைப்பாறிய சிரேஷ்ட பரிசோதகருமான சி.தெய்வேந்திரம்,யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செ.அகீஸ்பரன், கௌரவ விருந்தினர்களாக அச்சுவேலி லயன்ஸ் கழக தலைவரும் முன்னாள் பிரதி அதிபருமான சி.யோகசிங்கம்,கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் அ.சற்குணநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-2)

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முகாமையத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் ,கௌரவ விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி திருமதி ஜே.தியாகலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-2)

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி புஸ்பராணி சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு.திருமதி குமரவேலு, சிறப்பு விருந்தினர்களாக காரை வடக்கு கிராம அலுவலர் நீ.பாலாம்பிகை, பழைய மாணவர் சோ. விமலதர்ம ஐயா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

(காரைநகர்)

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் சு.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ. புவனேந்திரன், கௌரவ விருந்தினர்களாக சி.வி.பா.கோபிரமணா, ஆறுமுகம் ரெக்ஸ் ரைல்ஸ் உரிமையாளர் திரு.திருமதி. அருள் ஜோதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

# தீக்காயங்களுடன் குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கு தவறுதலாக கீழே விழுந்ததில் தீக்காயங்களுக்கு இலக்கான நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 9 மணிக்கு இடம்பெற்றுள்ளது. திருநெல்வேலி மாரியம்மன் வீதியைச் சேர்ந்த கந்தசாமி குலேந்திரன் (வயது 34) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தீக்காயங்களுக்கு இலக்கானவராவார். கை மற்றும் நெஞ்சு ஆகிய பகுதிகளில் தீக்காயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி பிரார்த்தனை

நாட்டில் சாந்தி சமாதானம் அமைதி வேண்டி இந்துசமய அமைப்புகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை பிரார்த்தனை நிகழ்வில் ஈடுபடவுள்ளார்கள்.

நல்லை ஆதீனத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் நமது நாட்டில் சாந்தி சமாதானம் அமைதி நிலவ வேண்டும் என வேதபாராயணம்,தேவாரம், பண்ணிசை, கூட்டு பஜனை என்பன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அனைத்து மத மக்களையும் கலந்துகொள்ளும்படி இந்துசமய அமைப்புகள் வேண்டியுள்ளன. (ஓ)

## கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டி முடிவுகள்


(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கிடையிலான எல்லே போட்டியில் மட்டுவில் வளர்மதி வி.கழகத்தை எதிர்த்தாடிய மட்டுவில் கலைவாணி ஸ்ரார் வி.கழக அணி 3:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கிடையே நடைபெற்ற எல்லே போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் வி. கழகத்தை எதிர்த்தாடிய சாவ.தென்னகத் தாரகை வி.கழக அணி 2:1 என்ற புள்ளியைப் பெற்று வெற்றிபெற்றது. (ஓ-27)

# பிரணாப் முகர்ஜியின் அறிக்கை தமிழர்கள் மீது வீசப்படும் கொத்துக் குண்டுகளை விட கொடூரமானது

## வைகோ தெரிவிப்பு



(சென்னை)

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட அறிக்கையானது ஈழத் தமிழர்கள் மீது வீசப்படும் கொத்துக் குண்டுகளை விடக் கொடூரமானது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கும் தமிழ் இன மக்களை காப்பாற்ற வேண்டும் என்று தாய்த் தமிழகத்து மக்களின் உள்ளம் வேதனையில் துடித்துக் கொண்டு இருக்கையில், அந்த நெஞ்சில் நெருப்பை அள்ளிப்போடும் அக்கிரமத்தை இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்றத்தில் சிங்கள கொடியோரின் ஊது குழலாக மாறி அறிக்கை தந்துள்ளார்.

மத்திய அரசின் மீது நான்காண்டு காலமாக நான் கொடுத்த குற்றச்சாட்டு நூற்றுக்கு நூறு உண்மை என்பதற்கு பிரணாப் முகர்ஜி தந்த அறிக்கையே ஒப்புதல் வாக்குமூலம் ஆகிவிட்டது.

உலகின் பல நாடுகளில் இருந்தும் பெற்றுள்ள ஆயுத பலத்தோடும், இந்தியா வழங்கி உள்ள மிக சக்தி வாய்ந்த நவீன ஆயுதங்களின் உதவியோடும் சிங்கள இராணுவம் தமிழர் தாயகத்தின் பகுதிகளை ஆக்கிரமித்ததைத் ராஜபக்ச கெக்கலிக்கொட்டி கொக்கரிப்பதைப் போல பிரணாப் முகர்ஜியும் அதே மமதையோடும், கும்மாளம் போடும் குதூகலத்தோடும் வார்த்தைகளை வீசியுள்ளார்.

சிங்கள இராணுவம் பாரிய வெற்றிகளை பெற்றுவிட்டதாகவும், கிளிநொச்சி வீழ்ந்து விட்டதாகவும் ஆனையிறவைக் கைப்பற்றி விட்டதாகவும் முல்லைத்தீவுக்குள் நுழைந்து விட்டதாகவும் தம்பட்டம் அடிக்கிறார் பிரணாப் முகர்ஜி.

வெறும் 150 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்குள் விடுதலைப் புலிகள் முடக்கப்பட்டு விட்டதாகவும், அதுவும் 70 ஆயிரம் தமிழ் மக்களை வலுக்கட்டாயமாக புலிகள் பிடித்து வைத்திருப்பதாகவும் பிரணாப் முகர்ஜி கூறுகிறார்.

தமிழர்களை இலங்கை இராணுவம் துடிக்க துடிக்க கொல்வதை மூடி மறைத்து தமிழர்களை விடுதலைப் புலிகள் கொல்கிறார்கள் என்று மனச்சாட்சியை குழிதோண்டி புதைத்து விட்டு பிரணாப் முகர்ஜி மிக ஏளனமாகக் குற்றம் சாட்டுகிறார்.

முல்லைத்தீவு பகுதியில் ஏற்கனவே மூன்று இலட்சம் தமிழர்கள் இருந்தனர். இப்போது வவுனியாவில் இருந்தும், கிளிநொச்சியிலிருந்தும் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மக்கள் முல்லைத்தீவுக்குள் வந்துள்ளனர்.

தமிழ் இனத்தையே அழிக்க தன் இராணுவத்தை ஏவி உள்ள ராஜபக்ஷ கூறியதை இந்திய வெளிவிவகார மந்திரி அப்படியே வழிமொழிகிறார்.

35 ஆயிரம் தமிழர்கள் புலிகளின் பிடியிலிருந்து விடுபட்டு வந்து விட்டார்களாம். இலங்கை அரச தலைவர் சொன்னதை இந்தியாவின் மந்திரியும் சொல்கிறார்.

அது மட்டுமல்ல, போர் இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டதாகவும் விரைவில் எல்லாம் முடிந்து விடும் என்றும், அதற்கு முன் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்து விட வேண்டும் என்று பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

புலிகள் ஏற்கனவே தமிழ் இனத்திற்கு கேடு செய்து விட்டார்களாம். 23 வருடங்களாக இலங்கைத் தீவில் இருந்த அமைதியின்மை ஒரு முடிவுக்கு வரப்போகிறதாம். அமைதி திரும்பப் போகிறதாம். அதன்பிறகு தமிழர்கள் பகுதிகளில் பொருளாதார மறு வாழ்வுக்கு இந்தியா உதவுமாம்.

தமிழீழத்தை சுடுகாடாக்கிவிட்டு அதற்குப் பின் இந்தியா அங்கே புதுவாழ்வு கொடுக்கப் போகிறதாம். நினைத்தாலே இரத்தம் கொதிக்கிறது.

இத்தனை கொடுமைகளையும், தமிழர் இன அழிப்புப் போரையும் சிங்கள அரசு செய்வதற்கு முழுக்க முழுக்க ஆயுதம் உதவி மட்டுமின்றி எல்லாவிதமான உதவிகளையும் இந்திய அரசு செய்து வருவதால்தான் ஒப்புக்கு கூட போர் நிறுத்தம் செய்ய சொல்ல இந்திய அரசு தயாராக இல்லை.

மொத்தத்தில் இந்திய அரசின் துரோகத்திற்கு முழுப் பங்காளி கலைஞர் கருணாநிதி பிரணாப் முகர்ஜியின் அறிக்கை ஈழத்தமிழர்கள் மீது வீசப்படும் கொத்துக் குண்டுகளை விடக் கொடுமையானது.

தமிழர்களை அழிக்கும் நோக்கத்துடன் போடப்பட்ட கொடூர சதித்திட்டத்தை யார் வகுத்தார்களோ அந்த மாபாவிகளுக்கு மன்னிப்பே கிடையாது.

வினையை விதைத்து இருக்கிறார்கள். வினையை அறுப்பார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

# கனடாவில் தமிழ் மாணவர்கள் வீதி மறியல் போராட்டம்

கனடா ஒன்ராறியோ மாநிலத்தில் உள்ள யோர்க் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்கள் வீதி மறியல் கவனயீர்ப்பு போராட்டத்தினை நேற்று முன்தினம் நடத்தியுள்ளனர்.

யோர்க் பல்கலைக்கழக முன்றலில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்த வீதி மறியல் போராட்டத்தில் பெரும் திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

யோர்க் பல்கலைக்கழக முன்றலில் இருந்து பிரதான வீதியூடாக பேரணியாக சென்று மாணவர்கள் முழக்கங்களை எழுப்பியதோடு சன நெருக்கடி நிறைந்த வீதியினை மறித்து தமது கோரிக்கைகளை வலுவாக வெளிப்படுத்தினர். (ஓ-6)

# இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் காஸாவில் குண்டுமாரி



இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் கடந்த புதன்கிழமை தென் காஸா பிராந்தியத்தில் குண்டுமாரி பொழிந்துள்ளன.

காஸா பிராந்தியத்திலிருந்து ஏவப்பட்ட மோட்டார் குண்டு ஒன்று இஸ்ரேலில் விழுந்து வெடித்ததையடுத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது எகிப்திலிருந்து காஸாவுக்கு கடத்தல்களை மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்டு வந்த 7 சுரங்கப் பாதைகள் மற்றும் கான் யூனிஸிலுள்ள ஹமாஸ் போராளிகளின் சோதனைச் சாவடி என்பவற்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் மேற்படி தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து இதுவரை அறிக்கையிடப் படவில்லை. (ஓ-6)

# ஆணிவேரில் அரசியல் கறையான்கள்

பாரத தேசம் என்பது பரந்து விரிந்த ஆலமரம் போன்றது. இதில் உள்ள கிளைகள், இலைகள் எல்லாம் மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும் ஒப்பிடக்கூடியதாகவுள்ளன.

எல்லாவற்றுக்கும் ஆதாரமாக ஆணி வேர் உள்ளது. ஆம்! பாரத தேசம் என்ற மரத்தின் ஆணிவேர் ஆன்மீகமே! இனத்தால், நிறத்தால், மொழியால், சமயத்தால் வேறுபட்டாலும் ஆன்மீகம் (இறை நம்பிக்கை) எனும் ஆணி வேரை ஆதாரமாகக் கொண்டே மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர்.கலாசாரத்தில் மாறுபட்டோராக இருப்பினும் கடவுள் விஷயத்தில் ஒன்றுபட்டே நிற்கின்றனர். வடநாட்டவர் இராமேஸ்வரத்துக்கும், தென்னிந்தியர் காசிக்கும் போவதற்குக் காரணமாக இருப்பது ஆன்மீகம் தானே! வேளாங்கண்ணியும், நாகையும் அப்படிப்பட்ட தலங்களே!

இஸ்லாமாக இருந்தாலும், கிறிஸ்தவ மாக இருந்தாலும், இந்து மதமானாலும், சாமானியர்கள் சங்கடமின்றி வாழவே அவை வழி வகை கூறுகின்றன. நேயமிக்க, கருணை உள்ளம் கொண்ட, கடமை தவறாத மனித மணங்களை உருவாக்கவே மதங்கள் வழி வந்தோர் பாடுபட்டனர்.

உறவுமுறை கலாசாரம் இல்லாத தேசமான அமெரிக்காவில் சகோதர, சகோதரிகளே. என முழங்கிய விவேகானந்தரும்,வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி வருத்தப்பட்ட வள்ளலாரும் ஆன்மீகம் வடித்தெடுத்த அருந்தவச் செல்வங்களே!

அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியே மகாத்மாவாக முடிந்தது. மராட்டிய மன்னர் சிவாஜி கதையையும், மகா பாரதத்தையும் கேட்டதாலே சுபாஸ் போஸ் நேதாஜியாக முடிந்தது.

முடியாட்சிக் காலத்திலும் ஆன்மீக நெறியுடன் வாழ்ந்த அரசர்களே மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை தொலை நோக்குச் சிந்தனையுடன் செயல்படுத்தியதை வரலாறுகள் நிரூபிக்கின்றன. ஆனால் இன்றைய குழந்தைகளுக்கு ஆன்மீகம் என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை குழந்தைகளை கடவுளை நினைக்கச் செய்து நல்ல அறிவுரைகளை, பொது நலச் சிந்தனைகளை பெற்றோர் போதிப்பது அன்றாட பழக்கங்களில் ஒன்றாகவே இருந்தது. பள்ளிகளிலும் இறைவணக்க கூட்டம் நடந்தது. அதிலும் ஆன்மீகக் கருத்துகள் பரிமாறப்பட்டன. ஆக ஒவ்வோர் நிலையிலும் குழந்தைகளுக்கு சமூக அக்கறையுடன் ஆன்மீக அறிவுரைகள் அளிக்கப்பட்டன.

## வ. ஜெயபாண்டி

ஆனால் இப்போது காலையில் எழுந்த அவசரமாக பள்ளிக்குக் கிளம்பவே குழந்தைகளுக்கு நேரமில்லை. பெற்றோருக்கோ பிள்ளைகளை அனுப்பிவிட்டு தங்களது கடமைகளை கவனிக்கவே காலம் போதவில்லை.

வகுப்பறை சிறைக்குள்ளே வாடும் கைதிகளைப் போல பாடப்புத்தகங்களோடு மட்டும் குழந்தைகள் பழகும் அவலம். இதில் எங்கே இவர்கள் ஆன்மீகக் கருத்துகளை அறிவது?

தப்பித்தவறி ஏதாவது ஒரு பள்ளியில் ஆன்மீகக் கருத்துகள் கூறப்பட்டால் அதை 'மதவாதம்' எனக் கூக்குரலிடுவதற்கு ஓர் கூட்டமே காத்திருக்கிறது. மொத்தத்தில் பொறாமையற்ற விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை உடையோராக வளர உதவும் ஆன்மிகக் கருத் துகளை குழந்தைகள் பெற முடியவில்லை. இதனால் அவர்கள் மனதில், 'தான்' என்ற சுயநலமும் வர்த்தக நோக்கில் குறுக்கு வழியில் முன்னேறும் பண்பும் குடி புகுந்து விடுகிறது. தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. அடுத்தவருக்கு இருகண் போனாலும் போகவேண்டும்என்ற அபாய எண்ணம்தோன்றுகிறது.

தனிமனித ஒழுக்கத்தையும் கூட்டு முயற்சி சாதனை எண்ணங்களையும் உருவாக்கும் ஆன்மீகக் கருத்துள்ள கதைகளை 'மூட நம் பிக்கைகள்' என முளையிலேயே கிள்ளி எறிந்து விடும் கூட்டத்தால் இளைய தலை முறையினர் அறவழி மறக்கின்றனர். 'கடவுள் மறுப்பு' 'பகுத்தறிவு' என்ற பெயரில் தமிழகத்தில் ஆன்மீக உணர்வை அற்றுப் போகச் செய்யதிராவிட இயக்கங்கள் முயன்றதாலேயே இன்று மனச்சாட்சி இல்லாத மனிதர்கள் மலிந்து போனதாக மூத்தோர் பலர் ஆதங்கப்படுகின்றனர். மரத்தின் ஆணி வேரை உணவாக்க முயலும் கறையான் கூட்டம் போலவே ஆன்மீகத்தை தங்களது சுயநலத் துக்காக பயன்படுத்தும் அரசியல்வாதிகள் அதிகரித்து விட்டனர். இந்நிலை மாறிட வேண்டும். எந்திர உலகில் மனித மனங்களின் கோணங்களை மாற்றும் மந்திர மையமாக கோயில்கள் திகழ்வது அவசியம்.

நன்றி தினமணி

# வன்னி மக்களைக் காப்பாற்றுமாறு ஒபாமாவைக் கோரும் பிரமாண்டமான பேரணி இன்று வோஷிங்டனில்

## அனைவரையும் அணிதிரள வேண்டுகோள்

இலங்கையில் போரை நிறுத்தி வன்னி மக்களைக் காப்பாற்றுமாறு அமெரிக்க அரச தலைவர் பராக் ஒபாமாவைக் கோரும் பிரமாண்டமான தமிழர் பேரணி அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டன் டி.சியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலத்தின் தேவையும், கட்டாயமும் கருதி இந்தப் பேரணியில் பெருந்திரளாகப் பங்கேற்குமாறு வட - அமெரிக்கத் தமிழர்கள் எல்லோரையும் பேரணி ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள்.

"அரச தலைவர் பராக் ஒபாமாவையும் அமெரிக்க வெளியுறவு ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளிண்டனையும் நாம் வேண்டிக் கேட்கவுள்ளோம்" என இந்த பேரணி ஏற்பாட்டின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பராக் ஒபாமா அமெரிக்காவின் அரச தலைவராக மட்டுமன்றி, இந்த உலகத்தின் தலைவராகவும் நீதி மறுக்கப்பட்ட மக்களின் ஒரே நம்பிக்கை ஒளியாகவும் இன்று விளங்குகின்றார்.

எனவே எமக்கான நீதி கிடைக்க வழி செய்யுமாறு கேட்டு நாங்களும் அவரிடம் செல்கின்றோம்.

அது மட்டுமல்லாது, அமெரிக்காவின் முன்னைய நிர்வாகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற கொள்கை தான், அரசியல் அபிலாஷைகளுக்கான நியாயமான எங்கள் விடுதலைப் போரை, 'பயங்கரவாதம்' எனத் தவறாகக் கொச்சைப்படுத்தித் தமிழர்களை இன்றும் சீரழிக்கின்றது.

பழைய அமெரிக்க நிர்வாகத்தின் அந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்துத் தான் இலங்கை அரசாங்கம் போரை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் தமிழர்கள் மீது பூசப்பட்டுள்ள இந்த 'பயங்கரவாத'ச் சாயத்தை அகற்றி - எமக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டிய ஒரு தார்மீகக் கடமையும் அதிபர் ஒபாமாவுக்கு உண்டு. அதனால் தான் நாம் அவரை நாடிச் செல்கின்றோம்" எனக் குறிப்பிட்டார். (ஓ-6)

# கல்வி அமைச்சின் ஊடாக ஆசிரியர்களுக்கு விசேட கணனிப்பயிற்சிகள் வழங்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த

(கொழும்பு)

2010ஆம் ஆண்டிற்குள் ஒரு இலட்சம் ஆசிரியர்களுக்கு கணனித்தொழில் நுட்ப மற்றும் ஆங்கில அறிவை வழங்கி இலங்கையில் தொழில்நுட்பவளர்ச்சியை ஏற்படுத்துவதே எமது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். இதற்கென 6 வாரத்திற்குள் 50 மணித்தியாலய விசேட கணனிப் பயிற்சிகள் கல்வி அமைச்சு ஊடாக ஆசிரியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு லப் டொப் கணனிகளை வழங்கும் கல்வி அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் திங்கட்கிழமை 17 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கல்வி அமைச்சர் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாண்டை ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

கிராமிய மட்டத்தில் ஆங்கில மொழியையும் தகவல் தொழில்நுட்ப அறி வையும் வழங்குவதன் மூலம் இலங்கையில் எதிர்கால சந்ததியினரை பலம் வாய்ந்த சமூகமாக உருவாக்க முடியும் என்பதே அரசின் நோக்கமும் கொள்கையும் ஆகும்.

உதவி வழங்கக்கூடியவர்க ளும் போதுமான வளங்கலும் உள்ள போதிலும் இலங்கையின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி வீழ்ச்சியடைவதற்கு பிரதான காரணம் சரியான பயிற்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படாமையே யாகும்.

ஆனால் ஜனாதிபதியின் புதிய தொழில்நுட்ப கல்விக்கான வேலைத்திட்டம் இலங்கையில் புதிய தோற்றத்தினை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. பாடசாலைகள் மத்தியில் தகவல் தொழில்நுட்பங்ளை அறிமுகப்படுத்தி மாணவ சமூகத்திற்கு வழங்குவதன் மூலம் மிக எளிதாக தொழில்நுட்ப அறிவியல் கொண்ட சந்ததியினரை உருவாக்க முடியும்.

எனவே முதலில் ஆசிரியர்களுக்கு இக் கல்வி தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

இதுவரையில் சுமார் 7ஆயிரம் ஆசிரியர்கள் வரை தகவல் தொழில்நுட்பப்பயிற்சிகளைப்பெற்றுள்ளனர். எதிர்காலத்தில் சகல ஆசிரியர்களும் இவ் அறிவினை பெற்றுக் கொண்டு மாணவ சமூகத்தினரின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த பங்காற்றவேண்டும்.

கொழும்பில் உள்ள பிரதான பாடசாலைகளை விட கிராமிய மட்டத்தில் தற்போது அரசினால் மேற்கொண்ட நெனசல வேலைத்திட்டத்தின் மூலம் கூடிய வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. (ஓ-6)

# வடக்கில் இடம் பெயர்ந்தவர்களுக்கு அவுஸ். 4 மில்லியன் டொலர் உதவி

இலங்கையில் வடக்கில் இடம்பெயரும் மக்களின் அடிப்படை மனிதாபிமான உதவிகளுக்கென அவுஸ்திரேலியா 4 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் சுமித் தெரிவித்துள்ளார். வடக்கில் யுத்தத்தின் காரணமாக இடம் பெயரும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே இந்த நிதி வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# சுனாமியை விட வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரின் நிலைமோசமானது

## ஆயர் அதி.வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது ஏற்பட்ட பாதிப்புகளுடன் ஒப்பிடும் போது வன்னியில் யுத்த அனர்த்தத்திற்கு உள்ளாகிக் காயமடைந்தவர்களின் நிலை மிக மோசமானது என மட்டக்களப்பு -திருகோணமலை ஆயர் கலாநிதி அதி.வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ளார்.

திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்களை நேரில் சென்று பார்வையிட்டுத் திரும்பிய பின்பு இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பு தரப்பின் விசேட அனுமதி பெற்றே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை பார்வையிட்டோம் இராணுவம் பொலிஸ் மற்றும் கடற்படை ஆகியன அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் வெளியார்கள் பார்வையிடுவதற்கு அனுமதியில்லை இந்நிலையிலேயே இந்த விசேட அனுமதியைப் பெற்று நாம் நோயாளர்களைப் பார்வையிட்டோம்.

காயமடைந்தவர்களைப் பொறுத்த வரை பலரது கண்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பலர் கைகளையும் கால்களையும் இழந்துள்ளனர். சிலர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். சிலரது உடலினுள் இன்னமும் குண்டுகள் அகற்றப்படாமல் இருப்பதை எக்ஸ்ரே மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது மக்களுக்கு இப்படியும் ஒரு மோசமான நிலை வந்து விட்டதே என்று வேதனையாக உள்ளது. ஏற்கனவே ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கிருந்து சிகிச்சைக்காக அழைத்து வரப் பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளமையினால் வைத்திய சாலையில் இட நெருக்கடி காரணமாக மெத்தைகள் போடப்பட்டு நோயாளிகள் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டுள்ளார்கள். இதனைத் தவிர ஏனைய வைத்தியசாலை களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

மேலும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நிலமையைச் சமாளிப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் அங்கு எந்நேரத்திலும் த்யார் நிலையிலேயே இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த விடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்களிப்பு பாராட்டுக்குரியது.

காயமடைந்து வைத்தியசாலையில் உள்ளவர்களைப் பொறுத்த வரை அவர்களுக்கு எந்த சிந்தனையும் இல்லை அவர்களுடைய உறவினர்களைப் பற்றிய சிந்தனையி லேயே அவர்கள் இருக்கின்றார்கள தங்கள் உறவினர்களைப் பற்றி தகவல்களைப் பெற்றுத் தருமாறு அவர்கள் கோரினாலும் அது உடனடியாக சாத்தியப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

வைத்திய வசதிகளும் ஏனைய வசதிகளும் அவர்களுக்கு போதியளவு வழங்கப் பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது. வைத்தியர்கள், தாதிகள் உட்பட வைத்திய மற்றும் சுகாதார துறையைச் சார்ந்த சகலரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவது பாராட்டுக் குரியது. என்றும் அவர் தெரிவித்தார்.(ஓ-6)



கரவெட்டிசரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற குருளைச் சராணர் சின்னம் சூட்டும் விழாவில் சின்னஞ்சூட்டப்பட்ட குருளைச்சாரணச் சிறுவர்கள்,அதிபர் எஸ்.செல்வானந்தன்,பொறுப்பாசிரியைகளுடன் காணப்படுகின்றனர். (படம் : பரு.நிருபர்)



பருத்தித்துறை வட .இந்து மகளிர் கல்லூரியின் தரம் 1, தரம்2 மாணவிகளுக்கு பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமத்தின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இச் சிறுவர்களுக்கான பால்வழங்கும் திட்டத்தை கல்லூரி பிரதி அதிபர் திருமதி செங்கமலர் பாலேந்திரா ஆரம்பித்து வைப்பதையும் சுவாமி சித்ரூபானந்தா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் : பரு.நிருபர்)



சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி கல்விப்பணிப்பாளர் மு.நடராஜா மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்த நடராசா, சிரேஷ்ட ஆசிரியை திருமதி ச. பாலசுந்தரம் ஆகியோர் காணப்படுகின்றனர்.





ஊரொழு கணேசா வித்தியாசாலை இல்ல மெய் வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் வெற்றியீட்டிய இல்லத் தலை வருக்கு வெற்றிக்கேடயம் வழங்கு வதையும், வித்தியாலய அதிபர் சி.திரிகரன் உரை யாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப் பதையும் படங்களில் காணலாம் (படங்கள்: நீர்வேலி செய்தியாளர்)

சாபங்கள்–கோழிக்குஞ்சுகளைப் போன்றவை.
அவை நம் வீட்டுக்கே திரும்பி வந்துவிடும்.
– ஹாலந்து

வலம்புரி

## அவுஸ்திரேலியக் காட்டுத் தீயிலும் பெரிது உறவை இழந்து அழும் ஊமை அழுகை

வன்னியில் நடக்கும் அவலம் கண்டு உள்ளம் குமுறாத மனிதங்கள் இருக்கவே முடியாது.

குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர் என எந்த வேறுபாடுமின்றி சங்காரம் நடந்தேறுகிறது. இந்தச் சங்காரத்திற்கான காரணகர்த்தாக்கள் என்றோ ஒருநாள் இறைவன் முன் பதிலளித்தே ஆகவேண்டும்.

அதேநேரம் யார் யார் எல்லாம் தம் உறவுகளை இழந்து கண்ணீர் வடிக்கிறார்களோ அதற்கு பிராயச்சித்தமாக கண்ணீருக்கு காரணமானவர்களும் கலங்கும் காலம் உண்டு.

இது இறைநம்பிக்கையால் மட்டும் கூறப்படுவதில்லை.வரலாற்றின் படிப்பினையும் இதுவே. எதுவாயினும் தற்போது இருக்கக் கூடிய சூழமைவு யாரையும் குறைகூறி நியாயம் தேடுவதற்குரியதல்ல.

வன்னியில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். தங்களைக் காப்பாற்றுமாறு கதறுகிறார்கள்.

1958 கலவரம், 83 கறுப்பு யூலை என்ற வரலாற்றுப் பதிவுகளையெல்லாம் தாண்டி தமிழினம் கூண்டோடு அழிபட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கு மேலாக தங்கள் உறவுகளுக்கு என்னவாயிற்றோ என்று ஏங்கி ஏங்கி நாளும் மரணித்துக் கொண்டிருக்கும் மக்கள் நிலை மிகப் பெரும் பரிதாபத்திற்குரியது.

உறவை இழந்த செய்தி கேட்டு உரக்க அழுவதற்கும் முடியாமல் அழும் அழுகை இருக்கிறதே அது அவுஸ்திரேலியக் காட்டுத் தீயிலும் பன்மடங்கு மோசமானது.

'அல்லற்பட்டு ஆற்றாத கண்ணீர் அன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை' என்ற வள்ளுவன் வாசகம் மறப்பதற்குரியதல்ல.

இந்த உண்மையை அரசு உணர்ந்து கொள்ளத் தவறினாலும் சிங்கள மக்கள் தவறலாகாது.

இந்தத் தேசம் விடியவேண்டுமாயின் சிங்கள மக்கள் தமிழரைக் காப்பாற்ற குரல் கொடுக்க வேண்டும்.

பௌத்த பிக்குகள் மனித அவலத்தைத் தடுக்க பிரித் ஓத வேண்டும். கூடவே மனிதப் படுகொலைகள் வேண்டாம். அது மாபாவம் என்ற அறத்தை உரியவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இதைச் செய்யத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் மனித அவலம் இந்த நாடு முழுவதையும் எரிக்கும். அப்போது விட்ட தவறுக்காக வருந்துவதெல்லாம் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரத்திற்கு ஒப்பான விடயமாகிவிடும்.

# வவுனியாவில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு சுகாதார சேவைகள் வழங்க 1500 தாதியர்கள் அனுப்பிவைப்பு

## சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் அமைக்கப்பட்டிருக்கும் நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சுகாதார சேவைகளை மேற்கொள்ளவென ஆயிரத்து 500 தாதியரை உடனடியாக வவுனியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்தத் தாதியர் வவுனியாப் பகுதியில் அடுத்துவரும் ஆறு மாதங்களுக்கு தொடர்ந்து கடமையாற்ற வேண்டும் எனவும் அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

இதேநேரம் கொழும்பிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமை புரியும் எட்டு மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றையும் இரு தினங்களுக்குள் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கவும் அமைச்சு முடிவு செய்திருக்கிறது. புலிகள் இயக்கத்தினரின் பிடியிலிருந்து இதுவரை 35 ஆயிரத்து 756 பொது மக்கள் தப்பி வந்துள்ளனர். இவர்கள் வவுனியாவில் அமைக்கப்பட்டிருக்கும் நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் முல்லைத்தீவில் சிக்குண்டிருந்த ஆயிரத்து 150 நோயாளர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடல் மார்க்கமாக அழைத்து வந்துள்ளது. இவர்கள் திருமலை வவுனியா பொலனறுவை வைத்தியசாலைகளில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் மக்களுக்கான ஆரோக்கிய சேவை தொடர்பாக சுகா தாரப் பராமரிப்பு போஷாக்கு துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் கொழும் பில் அவ சரக் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் போதே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின் றன.

இதேவேளை மன்னார் மதவாச்சி ஆஸ்பத்திரிகளின் ஆரோக்கிய சேவையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மருத் துவ நிபுணர்களையும் தாதியரையும் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கவும் இக்கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் டாக்டர்கள் தாதியர் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களின் தங்குமிட மற்றும் உணவு வசதிகளைக் கவனிக்கவென மூன்று அதிகாரிகளை சுகாதாரப் பராமரிப்பு அமைச்சு இணைப்பாளராகவும் நியமித்திருக்கிறது.நிவாரணக் கிராமங்களில் வாந்திபேதி, வைரஸ் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவாமல் இருப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள் ளார். (ஓ)

# யுத்தத்தை குறித்த தேர்தல் வெற்றிகள் அரசாங்கத்திற்கு நிரந்தரமானவையல்ல

## ஐ.தே.க.எம்.பி.கபீர் ஹாசிம் தெரிவிப்பு

மக்களை ஏமாற்றி தேர்தல்களை வெற்றி கொள்ள கைதேர்ந்தவர்களாக அரச தரப்பினர் இருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் கேகாலை மாவட்ட எம்.பி.கபீர் ஹாசிம் கடந்த செவ்வாய் அன்று சபையில் தெரிவித்தார்.

யுத்தத்தைக் காட்டிய தேர்தல் வெற்றிகள் அரசாங்கத்திற்கு நிரந்தரமானவை அல்ல என்றும் அவர் கூறினார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே கபீர் ஹாசிம் எம்.பி.மேற் கண்டவாறு தெரிவித்தார்.அவர் இங்கு மேலும் பேசுகையில், தேர்தல்களை வெற்றி கொள்வதற்கும் வாக்காளர்களை கவர்வதற்கும் அவர்களை ஏமாற்றுவதற்கும் அரசாங்கம் பல்வேறு உபாயங்களை பயன்படுத்திக்கொண்டது.

இராணுவப்படையினர் வெற்றிகளை குவித்துக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான வெற்றி மாலைகளை அரசியல் வாதிகளே அணிந்து கொள்கின்றனர்.

ஆனால் காயமடைகின்ற படையினருக்கு உரிய முறையிலான சிகிச்சைகள் கூட நடைபெறுவதில்லை. இவ்வாறு இருக்கும் போது படையினரின் வெற்றியை முன் வைத்து தேர்தலை வெற்றிகொண்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. களனிப்பல்கலைக்கழகத்தில் அண்மையில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. இதன் பொறுப்புக்களை அரசாங்கமே ஏற்கவேண்டும். மக்களின் தேவைகளுக்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப் பட்ட நிதி தேர்தல் நடவடிக்கைகளுக்காக வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கண்டி வாசஸ்தலத்திற்கு லட்சக்கணக்கானவர்களை அழைத்து விருந்து படைத்தமையானது மோசமான விடயம். இவ்வாறு செலவழிக்கப்படுகின்ற பணம் பொதுமக்களின் பணமாகும். இது குறித்து கேள்வி எழுப்ப வேண்டிய தேவை எதிர்க்கட்சியான எமக்கிருக்கின்றது .இலங்கையில் மாத்திரமே உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. உதாரணமாக 400கிராம் பால்மா பைக்கற் ஒன்றை 100 ரூபா முதல் 110 ரூபா வரையில் விற்பனை செய்ய முடியும் .ஆனால் அரசாங்கம் அதனைச் செய்யாது அந்த விலையை இரட்டிப்பாக்கியுள்ளது. இவ்வாறு மக்களிடம் கொள்ளையடித்துத்தான் அமைச்சர்களை அரசாங்கம் பாதுகாத்துவருகின்றது. யுத்த வெற்றியை தழுவிய தேர்தல் வெற்றிகளை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள முடியாது. யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துள் ளது. இந்நிலையில் நாட்டின் வருமானம் பன்முகப்படுத்தப் -படவேண்டும் என்று தெரிவித்தார்.(ஓ)

### யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார மலருக்கான ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழா இவ்வருடம் மே மாதம் கொண்டாடப்படவுள்ளது. இவ் விழாவில் யாழ். பிரதேச கலாசாரப் பேரவையால் 'கலாசார மலர்' ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இம் மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்கள் யாவும் பொதுக்கலை, கலாசார அபிவிருத்தி மற்றும் நடனம்,இசை,கூத்து,கவிதை,நாடகம் மற்றும் யாழ்ப்பாணக் கலாசாரம் சார்ந்த விடயப்பரப்புக்களை கொண்டிருக்கவேண்டும். இதற்கான ஆக்கங்களை மார்ச்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு கலாசாரப் பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமாகிய மரியதாஸ் ஜெகூ கேட்டுக்கொள்கிறார். (ஓ-6)

# வெள்ளி நற்சிந்தனை 59

# பக்தியின் மொழி தமிழ்

இளமைப்பருவத்தில் வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் உண்டு. இளமைக்காலம் கல்விக்கு உகந்த ஒரு காலமாகும். அறிவுப்பசி கொண்டு அலையும் காலம் எனவும் அதனைக் கூறலாம். குறிப்பாகப் பிறரது செயற்பாட்டை விமர்சனம் செய்யும் எண்ணம் இந்தப் பருவத்திலே முனைப்பாகத் தோன்றும்.

முதியவரைக் கண்டாலே ஒரு வெறுப்பு முளும். தானும் ஒருநாள் முதுமையடைய வேண்டும் என்ற நியதியை மறந்து விட்டு தன் மனத்தை அலைய விடும் காலமும் இதுவே. இத்தகைய இளமைப்பருவத்தை விரும்பிய சம்பந்தர் பல பாடல்களில் தன்னுடைய நோக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

சம்பந்தருடைய வாழ்வியல் சிறுவது முதல் இளமை வரை ஒரு நெறிப்பட்டதாக இருந்தது. வளர்ப்புச் சூழலால் ஒரு பக்தி நெறியின் செயற்பாடுகளை அவர் உணர்ந்திருந்தார். அதனால் பெரிதும் ஈர்க்கப்பட்ட அவர் இளந்தலை முறையினரைப் பக்திச் சூழலில் இணைக்கப் பணி செய்தார்.

இசையின் துணை கொண்டு அந்த இளம் உள்ளங்களை வசப்படுத்தலாம் என எண்ணினார். அதற்கேற்ற வகையில் பக்திப் பாடல்களைத் தலங்கள் மீது பாடினார். ஒவ்வொரு தலத்தைப்பற்றியும் பத்துப்பாடல்கள் பாடினார். தாளத்தோடு அவர் பாடல்களைப் பாடிக் கோயிலை வலம் வந்தபோது இளம் தலைமுறையினர் அவரோடு இணைந்து கொண்டனர்.

தலங்களின் இயற்கைச் சூழலும் அழகிய தோற்றமும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. வாழ்க்கையைப் பற்றிய உண்மையான நிலையை அறியவைத்தன.

திருக்கோவில் வழிபாட்டால் கிடைக்கும் அமைதியான நிறைவான இன்பத்தை எல்லோரும் அனுபவிக்கலாம் எனக் கூட்டிச் சென்றார் சம்பந்தர்.

உலக வாழ்க்கையின் மீதுள்ள பற்றினால் இன்றைய நாட்பொழுதையும் நாளைய நாட்பொழுதையும் நன்றென்று கருதுகின்ற இச்சையால் தூண்டப்பட்டுச் செயற்படும் இளைஞர்களுக்குச் சம்பந்தர் கூறும் அறிவுரை சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. " இறக்கப் போகின்ற வாழ்க்கையை விட்டு விட்டுச் செல்லுங்கள். அழகான சிவனின் தோற்றத்தைக் கண்டு மகிழலாம்"

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

தொடர்ந்திலங்கும் சோதி வடிவானவனும் வெண்மையான சந்திரனையும் பரந்த புனலையம் கொன்றை மலரையும் செருகியுள்ள உச்சியை உடைய இறைவனின் அழகுக்கோலத்தைக் கூட் டிச் சென்று காட்ட விரும்புகிறார். இளம் உள்ளங்களை அழகு நிச்சயமாக வசியப்படுத்தும் என்பதைத் தனது உணர்வின் மூலம் உணர்ந்தமையால் அதைமற்றவருக்கும் உணர்த்த விரும்புகிறார். 'திருக்கோடிகா' என்னும் திருத்தலத்தில் சம்பந்தர் கண்ட இறைவன் உருவத்தின் சென்னி அழகு இளம் உள்ளங்களைக் கவரும் தன்மையானது. புதுமையை விரும்பும் இளமையை அதுவே ஈர்க்கும்.

"இன்று நன்று நாளை நன்றென்று நின்ற
விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக விட்டுப்
போது மின்
மின்றியங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சென்னியான் கோடி
காவுசேர்மி னே."

# முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்கு

# கப்பல் மூலம் அழைத்துவரப்பட்டகாயப்பட்டோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

ஆர்.குகனேசன் -(வயது19), தர்மபுரம், ஆர். கலைச்செல்வி-(வயது 26), ஞானிமடம், பூநகரி, ரி.சுந்தரராஜ்-(வயது39), ஒட்டிசுட்டான், ரகுகுமார்-(வயது 32), ஞானிமடம், பூநகரி, ஆர்.பரமசாமி(வயது 33), பொன்னேரிக்குளம், கிளிநொச்சி, கோபி-(வயது 1), பொன்னேரிக்குளம் கிளிநொச்சி, ஆர் .ரஜீபன்-(வயது 3) , கிளிநொச்சி.

ஆர்.பரன்ஜா-(வயது 5), கிளிநொச்சி, ஆர். சிவகுமார்-(வயது 31), இரணைப்பாலை முல்லைத்தீவு, எஸ்.விதுசன்(வயது 1 1/2), இரணைப்பாலை முல்லைத்தீவு, என் .வேணி -(வயது 7), வட்டக்கச்சி முல்லைத்தீவு, ரஞ்சன்குமார்- (வயது 36) , வன்னேரிக்குளம், வி.சுகந்தினி-(வயது 23), மாதலை முல்லைத்தீவு.

எஸ்.லோஜினி-(வயது 13), முத்தையன்கட்டு முல்லைத்தீவு, எஸ்.புவியரசி-(வயது 8), முத்தையன்கட்டு முல்லைத்தீவு, எஸ்.தனுஜா-(வயது 5), முத்தையன்கட்டு முல்லைத்தீவு, எஸ்.விஜயலட்சுமி-(வயது 38), முத் தையன்கட்டு முல்லைத்தீவு, ஏ.ஜனனி-(வயது 12), ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, ஏ.சந் திரஜயந்தி -(வயது 44), ஸ்கந்தபுரம் கிளி நொச்சி, மனோன்மணி (வயது 64), முள்ளிய வளை முல்லைத்தீவு, ஜெ.சுகந்தினி-(வயது 3), முரசுமோட்டை கிளிநொச்சி.

எஸ். கோடிஸ்வரி -(வயது 40), முரசுமோட்டை கிளிநொச்சி, எஸ்.வஸ்தியான்-(வயது 40), மன்னார், எம்.அல்பிரட்-(வயது 54), மகாரம்பைக்குளம், வவுனியா,எஸ்.திலினராஜ-(வயது 37), புதுக்குடியிருப்பு முல்லைத் தீவு, ஜனார்த்தனன் -(வயது 28), முல்லைத்தீவு, ரி.அகல்யா-(வயது 8), புதுக்குடியிருப்பு முல்லைத் தீவு, வி.ராசன்நடா -(வயது 57), வவுனிக் குளம் முல்லைத்தீவு.

ரி.யான்சி-(வயது 13), புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, ஏ.பூராயனி -(வயது 1) இராமநாதபுரம் வட்டக்கச்சி, ஏ.பொன்னேஸ்வதி-(வயது 30), இராமநாதபுரம் வட்டக்கச்சி, பாவலன்-(வயது 5), கண்டாவளை, யு.கண்டரோசி-(வயது4), கண்டாவளை, யூ.அபி லேஷ் (வயது 6), கண்டாவளை கிளிநொச்சி, யூ.பனுஸ்ஸன்-(வயது5), கண்டாவளை கிளிநொச்சி .

யூ.ஐஸ்வரி-(வயது7) கண்டாவளை கிளிநொச்சி, கே.ராஜலஷ்மி -(வயது65), புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ரி.மல்லிகாதேவி-(வயது48), பூநகரி, பார்வதி-(வயது 59), விஸ்வமடு, முல்லைத்தீவு, வி.வேனிலா-(வயது35), கண்டபோக்கு, கிளிநொச்சி, வி.குகேந்திரன் -(வயது 2), கண்டபோக்கு, கிளிநொச்சி , வை.ராஜேஸ்வரி-(வயது45), 10, 2பென்ட் 5ஆம் குளம் முல்லைத்தீவு.

வை.கீதா-(வயது26), முல்லைத்தீவு, எம்.தியாகராஜ்-(வயது 67), தொம்பிலுவில், கே.ஜெயசீலன்-(வயது 30), நொச்சிக்குளம், என்.முத்துசர்மா-(வயது 3), மாங்குளம், என் .வினோஜன்-(வயது1 1/2), மாங்குளம், என்.குலஞானேஸ்வரி-(வயது 33), மாங்குளம், எஸ்.ஜெயராசா-(வயது 53), வட்டபளை, சாரூஜன்-(வயது8), கனகராஜன் குளம், விமலாதேவி-(வயது45), பொக்கனை, தினஜா-(வயது2), கனகராயன் குளம், ரி.சுமதி-(வயது 26), கனராயன் குளம், எஸ்.புவனேந்திரன்-(வயது 62), பொக்கனை, கே.மகேஸ்வரி-(வயது 50), சுனித்திராபுரம், ஜெ.லக்சிகா-(வயது3), பொக்கனை, பி.அமராவதி-( வயது 45), பொக்கனை.

ஏ.சுப்பிரமணியம்-(வயது 62), புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு , காந்தரூபன்-(வயது 22), தர்மபுரம் கிளிநொச்சி, ஏ.ஜெயவனிதா-(வயது 25), பாலையர் வெள்ளையான் குளம், ஜோதிகன்-(வயது 6மாதம்), பாலையர் வெள்ளையன்குளம் , டினேஸ்-(வயது 3), பாலையர் வெள்ளை யன்குளம், அரியம்மாள்-(வயது 44) தர்ம புரம், ரஜீபன்-(வயது 2 1/2) , இராமநாதபுரம், அஜித்தா-(வயது 10), இராமநாதபுரம், சீதாலக்சுமி-(வயது 37), இராமநாதபுரம்.

ரி.கிட்ணசாமி-(வயது 54), தர்மபுரம், ரி.அற்புதாதேவி-( வயது 55), மாத்தளன், எஸ்.விவானந்தன்-(வயது 35), புளியங்குளம், கே. கந்தையா-(வயது 74), பரந்தன் கிளிநொச்சி, பி.ஜானகி-(வயது65), குமரபுரம் பரந்தன் , சிவக்கொழுந்து-(வயது 77), நட்டான்காடு, நாகமுத்து -(வயது 83), நட்டான்காடு.

பி.பஞ்சலிங்கம்-(வயது 48), பரந்தன் கிளிநொச்சி, என் நாகம்மா(வயது 80), சுழிபுரம் யாழ்ப்பாணம், கனகதேவி-(வயது 34), நட்டான்காடு, அபிசன்-(வயது 3), நட்டான்காடு , இராமஜீவகன்-(வயது 19), ஆண்டான்குளம் மன்னார், யசிதா-(வயது 13), வள்ளிபுரம்,முல்லைத்தீவு, கே.அப்புத் துரை (வயது 80), அடம்பன் யாழ்ப்பாணம், கே.யசோதா-(வயது 33), வள்ளிபுரம்.

கே.தியாகராசா-(வயது53), கிளி நொச்சி, திவ்வியராசமணி-(வயது 54), பளை, ஏ.பிறேம்குமார்- (வயது 41), மாங்குளம், அனுஜகா-(வயது21),இர்வில் பளை,கே. ஆறுமுகம்-(வயது 81), நெடுந்தீவு, பி.திலகவதி (வயது 56), மல்லாவி, ரி.சுகுமார்-(வயது30), பரந்தன்,கிளிநொச்சி, ஏ.சாருமதி-(வயது 27), புதுக்குடியிருப்பு, ஏ.ஜனகன்-(ஆறு மாதம்), புதுக்குடியிருப்பு, ஏ.நிருசிகா-(வயது9), வட்டக்கச்சி, ஏ.தனுசா-(வயது8), வட்டக்கச்சி, இ.புஸ்பராணி-( வயது54), ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, எம்.நிசாந்தன்-(வயது20), விஸ்வமடு.

ஆர்.நிசாந்தி-(வயது27), வட்டக்கச்சி, எம்.ராஜரட்ணம்-(வயது58)மாதளம், எஸ்.கமல்ராஜ்-(வட்டக்கச்சி), வை.பிரிந்தாதேவி-(வயது 40), எஸ்.நிதர்சன்-(வயது 12), வட்டக்கச்சி, எஸ்.கிரிஜா-(வயது 10), வட்டக்கச்சி, எஸ்.நிரோசன்-(வயது8), வட்டக்கச்சி, மதிவதனா-(வயது31),வட்டக்கச்சி, தனுசிகாவதி-(வயது62),உப்பிலாங்குளம்,எல்.மேனகா-(வயது28), பொக்கனை, டிலானி-(வயது4), பொக்கனை, வி.தர்சினி-(வயது 30), புதுக்குடியிருப்பு, வி.அக்சனா-(வயது 1 1/2), புதுக்குடியிருப்பு, என்.கிருஸ்ணபிள்ளை-(வயது 52), சுகந்தபுரம், எஸ்.மார்க்கண்டு-(வயது 70), ஒட்டிசுட்டான்.

ரவிக்குமார்-(வயது 30), ஒட்டிசுட்டான், எஸ்.பிரியதர்சினி-(வயது24), வட்டக்கச்சி, விஜியலட்சுமி-(வயது46), அக்கராயன் குளம், மிதுனா-(வயது13) விஸ்வமடு, வி.ஆரியமாலா-(வயது 59), தாளையடி, எஸ்.சிவானந்தன்-(வயது 32), வட்டக்கச்சி, ஆர்.சந்திரதாஸ்-(வயது 34), வட்டக்கச்சி இராமநாதபுரம், எஸ்.கந்தசாமி-(வயது60), வள்ளிபுரம் புதுக்குடியிருப்பு.

எஸ்.யோகராஜா-(வயது 43), வட்டக்கச்சி இராமநாதபுரம், சி.கமலநாதன்-(வயது57), வட்டக்கச்சி இராமநாதபுரம், வை.துஷானி-(வயது2), அலம்பன், வை.மேரிகார்த்திகா-(வயது33), அலம்பன், வை.துஷ்யந்தன்-(வயது3), அலம்பன், வை.லூர்த்தம்மா-(வயது62), யாழ்ப்பாணம், பொக்கனை, ஏ.ஜோசப்-(வயது66), பொக்கனை அடர் காடு முல்லைத்தீவு, ஜி.பரிசனம்-(வயது33), குமுழமுனை.

கே.கலைராசி-(வயது 1) குமுளமுனை, ஜி.வித்துசா-(வயது4),குமுழமுனை, எஸ்.சஞ்சிகா-(வயது8),விஸ்வமடு, ரி.கஜேந்திரன்-(வயது16)விஸ்வமடு, ஆர்.சசிகுமார்-(வயது 35), விஸ்வமடு, எஸ்.திமிழ்விலா-(வயது 4), விஸ்வமடு, எஸ்.பிரதீபா-(வயது26), பொக்கனை, அடர்காடு முல்லைத்தீவு, வி.முருகேசு-(வயது 47), கனகராஜன்குளம், எம்.சுனேந்திரன்-(வயது13), கனகராயன் குளம், வி.யசோதரன்-(வயது 29), மன்னார், எஸ்.கோவிந்தன்-(வயது15), மன்னார், எம்.கனகாம்பிகை- (வயது16), வட்டக்கச்சி, எம்.கேசுதா-(வயது49),வட்டக்கச்சி, எஸ்.சானி- (வயது12), வட்டக்கச்சி.

பி.கண்மணி- (வயது56), மாதளன், எம்மதுரமுத்து-(வயது52),மன் னார்,எஸ்.ஜோனி-(வயது8), பரப்பக்கண் டல், ,எஸ்புனிதசீலி-(வயது34), பெரிய குளம், எம்.அம்பிகா-(வயது16), வட்டக்கச்சி, செல்வரஞ்சினி-(வயது55), முல்லைத்தீவு, ஏ.ஞானசேகரம் - (வயது 43), சாவகச்சேரி,-ஏ.பாக்கியம்-(வயது 70), பெரியதம்பனை - கே.ஜெயந்தி-(வயது 44), தொண்டை மானாறு , ஏ.புவனேஸ்வரி- (வயது 45), கிளிநொச்சி ,கே.பரமேஸ்வரி-(வயது 70), இராமநாதபுரம் , வி.தமிழினி- (வயது 26)சுதந்திரபுரம் ,எஸ்வேலாயி-(வயது 69), வள்ளிபுனம், தியாகராஜா- (வயது 31), இராமநாதபுரம் ,கே.சரோஜினிதேவி-(வயது 60), புதுக்குடியிருப்பு, ஆர்.கிருஷ்ண பிள்ளை-(வயது71), புதுக்குடியிருப்பு, என்.கணேசலிங்கம்-(வயது 50), ஒட்டு சுட் டான், ஜே.ஜிவன-(வயது13), பூநகரி, யூ.ஜெதுர் சிகா-(வயது 4),வட்டக்கச்சி, வி.நாகலக்சுமி -(வயது33), வட்டக்கச்சி, யு.சுயர்ஜன்-(வயது2), வட்டக்கச்சி, யு.இந்துஜா -(வயது6), வட்டக்கச்சி, ஜி.அமிர்தரஞ்சிதம் -(வயது 45),முல்லைத்தீவு கே.ஜனோஜா-(வயது 18), முல்லைத்தீவு, ஜி.நிரோஷன்-(வயது12), பூந கரி,கே.நித்தியானந்தன்-(வயது48) பெரிய பாபு,காரைநகர், கே.ஜானகி-(வயது 65), உருத்திரபுரம்,ஏ.மௌலீசன்-(வயது 15) மட்டுவில், எஸ்.குமரன்-(வயது 13), பூநகரி, எம். முறையன்-(வயது 23), யாழ்ப்பாணம், பி.உமேசன்-(வயது 15) மன்னார்.


இராசேந்திரன்-(வயது. 75), மல்லாவி, எம்.கீதாகௌரி-(வயது 44) வட்டக்கச்சி, வள்ளிப்பிள்ளை(வயது70) பூநகரி, தமிழன்பன்- (வயது2 1/2) பூநகரி, திருமதி எஸ்.விருசத்தம்மா (வயது 55),எ.ராதிகா(வயது 20), சரசாலை யாழ்ப்பாணம், என்.உதய சிங்கம்-(வயது 33), இராமநாதபு ரம்,என்.ஜெயலக்ஷ்மி-(வயது65), கிளிநொச்சி, எஸ்.செல்வமணி (வயது 50), உருத்திரபுரம், எம்.யோகேஸ்வரி-(வயது 58),முல்லைத்தீவு, இ.ஜெயதேஸ்வரி-(வயது 38), உருத்திரபுரம் .

என்.கிரு ஷாந்தன்-(வயது 18), இறம்பைக்குளம், நெடுங்கேணி, எஸ்.கமலதேவி-(வயது54), இறம்பைக் குளம் ,நெடுங்கேணி, கே.பரி மளாதேவி-(வயது 29), அக்கராயன் குளம், எஸ்.ஜனகன்-(வயது 25), உதயநகர், கிளிநொச்சி, எஸ்.மனோகரன்- (வயது 24), கிளிநொச்சி, பி.லலிதா-(வயது43), புதுக்குடியிருப்பு, எஸ்.சுந்தரசிங்கம்-(வயது 55), உடையார்கட்டு,முல்லைத்தீவு, ஆர்.முருகேசு-(வயது 47), வடமராட்சி, யாழ்ப்பாணம், எஸ்.குகயின்பன்-(வயது 6), பூநகரி, எஸ்.வைத்தியநாதன்-(வயது80), முல்லைத்தீவு.

கே.விஜிதா-(வயது28), புதுக்குடியிருப்பு, எஸ்.தேவரஞ்சினி-(வயது 43), வட்டக்கச்சி, எம்.தங்கராசா-(வயது 62), மாதளன், புவிலாதன்-(வயது 5), மாதளன், எம்.சுபாஜினி-(வயது 14), பரந்தன் கிளிநொச்சி, எஸ்.குகசீலன்-(வயது13),பூநகரி, பி.துலானி-(வயது35), திருவையாறு, எம்.தியாகராஜா-(வயது35), கிளிநொச்சி, ஜெ.செபஸ்தியன்-(வயது 18), பாரதிபுரம், கிளிநொச்சி.

பிரான்சிஸ்-(வயது70), பாரதிபுரம் கிளிநொச்சி, என்.கோகுலன்-(வயது27), கிளிநொச்சி, எஸ்.சிவகுமார்-(வயது35), பூநகரி, ஜெ.புவனேஸ்வரி-(வயது 23), மாதளம், எஸ்.ராஜேஸ்வரி-(வயது39), யாழ்ப்பாணம்.

கே.சின்னராஜா-(வயது54), சில்லாலை யாழ்ப்பாணம், எஸ்.ரஞ்சினி-பரந்தன் கிளிநொச்சி,எஸ்.சியாந்தி-(வயது29)-நெடுந்தீவு யாழ்ப்பாணம், கே.கனகமணி-(வயது64), நெடுந்தீவு, யாழ்ப்பாணம், சரித்தா-(வயது19), கிளிநொச்சி, எஸ்.உதயகுமாரன்-(வயது39), கண்டாவளை, எம்.செல் லையா-(வயது67) கே நட ராஜா (வயது 61) மட்டுவில்.



வன்னியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல்களில் காயமடைந்தவர்களைப் படங்களில் காணலாம்

## 503 ஓட்டங்கள் வெற்றி இலக்கு

# இங்கிலாந்து அணி நிர்ணயித்தது; போராடுகிறது மேற்கிந்தியத் தீவுகள்

(அன்டிக்குவா)

முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக் களை இழந்து 221 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 503 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதனடிப்படையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக் களையிழந்து 143 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றதுடன் இரண்டாவது போட்டி ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட கடந்த 15 ஆம் திகதி அன்டிகுவா மனமகிழ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 566 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனதுமுதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 285 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 281 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனினும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பொலோன் வழங்காமல் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 31 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 221 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 503 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதல் குக் 58 ஓட்டங்களையும் கொலின்வூட் 34, பீற்றர்சன் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பவல், பென் மற்றும் ஹைடன்ட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் எட்வோட்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனடிப்படையில் 503 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன் தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 143 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சர்வான் 47 ஓட்டங்களுடனும் சந்தர்போல் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காமல் துடுப்பெடுத்தாடிவருவதுடன் அணித் தலைவர் ஹயில் 46 ஓட்டங்களையும் சிமித் 21 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் பிரோட், சுவான் மற்றும் ஹார்மிசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஐந்தாவதும் இறுதி நாளான ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெற்றது.

### பார்முலா- 1 கார் பந்தயம்; அமெ.பெண் பங்கேற்பு

கார் பந்தய போட்டிகளில் மிகவும் பிரசித்தி பெற்றது பார்முலா கார் பந்தயம். அடுத்த ஆண்டுக்கான பார்முலா-1 கார் பந்தயத்தில் அமெரிக்க அணி பங்கேற்க முடிபு செய்துள்ளது.

அமெரிக்க அணியில் பங்கேற்க இருக்கும் வீரர்கள் பற்றிய விபரம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெளியிடப்பட உள்ளது. அந்நாட்டைச் சேர்ந்த டேனிகா பேட்ரிக் என்ற வீராங்கனை அணியில் பங்கேற்கலாம் என்று தெரிகிறது. 27 வயதான டேனிகாபேட்ரிக் 2005 ஆம் ஆண்டு கார் பந்தயத்தில் அறிமுகமானார். கடந்த ஆண்ட ஜப்பானில் நடந்த அந்த கார் பந்தயத்தில் வெற்றி பெற்றார். வெற்றி பெற்ற முதல் பெண் என்ற சாதனையைஅவர் படைத்து இருந்தார்.

# உலக கிண்ண போட்டிகள் பாகிஸ்தானில் நடக்குமா?

## ஐ.சி.சி. சந்தேகம்

(புதுடில்லி)

பாதுகாப்பு காரணங்களுக்காக உலக கோப்பை போட்டிகளை பாகிஸ்தானில் நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தேவைப்பட்டால் போட்டி நடக்கும் இடங்கள், நாடுகளை மாற்ற தயாராக இருக்கும்படி ஏற்பாட்டாளர்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) கேட்டுக் கொண்டுள்ளது.

எதிர்வரும் 2011 இல் உலக கோப்பை கிரிக்கெட் தொடர் இந்திய துணை கண்டத்தில் நடக்க உள்ளது. மொத்தம் 15 இடங்களில் போட்டிகள் நடக்க உள்ளன.

இதில் இந்தியாவில் 8, பாகிஸ்தானில் 4, இலங்கையில் 2, பங்களாதேஷில் ஒரு இடத்தில் போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் தொடர்ந்து பயங்கரவாத சம்பவங்கள் நடப்பதால் இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட அணிகள் அங்கு செல்ல மறுத்து வருகின்றன. இதையடுத்து உலக கோப்பை போட்டிகள் பாகிஸ்தானில் நடக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான முக்கிய கூட்டம் டில்லியில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்தது. இக்கூட்டத்தில் பேசிய ஐ.சி.சி தலைவர் ஹரூன் லார்கட் கூறுகையில், பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகமாக உள்ள பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டிகள் நடத்தப்பட உள்ளன. அப்போதைய சூழ்நிலையில் பிரச்சினை ஏற்படின் மற்ற நாடுகள் கலந்து கொள்வதில் சிக்கல் ஏற்படும்.

இதனால் போட்டிகளை நடத்த உள்ள நாடுகள் மாற்று இடங்கள், தேவைப் பட்டால் நாடுகளை மாற்றவும் தயார் நிலையில் அமைப்பாளர்கள் இருக்க வேண்டும். போட்டிகள் ஆரம்பமாக போதுமான கால அவகாசம் இருப்பதால் தற்போதைக்கு அவசரம் இல்லை. தவிர போட்டிகள் 6 வாரங்கள் நடப்பதாக அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் மேலும் நாட்களை குறைக்க ஏற்பாடுகள் செய்யப்படும். 49 போட்டிகளுக்கு மேல் இருக்காது என்றார்.

### மறுபரிசீலனை முறை நடுவர்களுக்கு உதவும்

(டுபாய்)

நடுவர் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யும் மறுபரிசீலனை முறையால் தவறுகள் பெருமளவு குறையும். தவிர, நடுவர்கள் எதிர்காலத்தில் சரியான முடிபுகளை எடுக்க நல்ல வழிகாட்டியாக அமையும் என சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நம்பிக்கை தெரிவித்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளின் போது நடுவர்கள் அளிக்கும் தவறான தீர்ப்புகளை தவிர்க்கும் பொருட்டு, ஐ.சி.சி மறுபரிசீலனை முறையை அறிமுகப்படுத்தியது. பரிசோதனையில் இருக்கும் இம்முறை முதன் முதலாக கடந்த ஆண்டு இந்தியா, இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டது. அதற்குப் பின் அவ்வப்போது பயன்படுத்தப் பட்டு வருகிறது. முதலில் ஒவ்வொரு இன்னிங்சிலும் தலா மூன்று முறைமேல் முறையீடு செய்யும் முறை இருந்தது. தற்போது இது இரண்டாக குறைக்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் இம்முறைக்கு ஆதரவும், சிலர் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து பேட்டி அளித்த ஐ.சி.சி.தலைவர் லோர்கட் கூறுகையில், மேல் முறையீட்டு மறுபரிசீலனை முறை, சரியான முடிபுகளை எடுக்க வழிகாட்டியாக அமைகிறது. இதன்மூலம் நடுவர்கள் தங்கள் தவறுகளை திருத்திக் கொள்ள முடியும். பரிசோதனையில் இருக்கும் இம்முறையால், சரியான முடிபுகளின் சதவீதம் 94 இலிருந்து 98 ஆக உயர்ந்துள்ளது.

இம்முறை நிரந்தரமாக்கப்படுவது குறித்து வரும் மே மாதம் நடக்க உள்ள ஐ.சி.சி கிரிக்கெட் குழு கூட்டத்தில் முடிபு செய்யப்படும் என்றார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (13)





இந்திய அணியுடனான தொடரைத் தொடர்ந்து இலங் கைக்கு 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட்-செப்ரம்பர் மாதங் களில் தென்னாபிரிக்க அணி சுற்றுப்பயணம் மேற் கொண்டு 3 ஒருநாள், 3 டெஸ்ட்போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

அக்காலப் பகுதியில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட் டித் தொடர்கள் நடைபெறும் போது இரு அணிகளும் ஒரு நாள் போட்டி, டெஸ்ட் போட்டி என மாறிமாறி தொடரில் விளையாடும்.

இதனடிப்படையில் இலங்கை-தென்னாபிரிக்க அணி களுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் திகதி கண்டி அஸ்கிரிய மைதா னத்தில் விளையாடியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மா னித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 41.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 179 ஓட்டங்களை எடுத்த போது மழை காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. மழை சில மணிநேரம் நீடித்து விட்ட மையால் இலங்கை அணியின் ஆட்டம் அத்துடன் இடை நிறுத்தப்பட்டு தென்னாபிரிக்க அணிக்கு 25 ஓவர்களில் 107 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்று இலக்கை போட்டி நடுவர் ரீட் (நியூசிலாந்து) நிர்ணயித்தார்.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முரளிதரனின் பந்துவீச்சுக்கு தடுமாறியது.

எனினும் தென்னாபிரிக்க அணி 14 ஓவர்களில் 4 விக் கெட்டுக்களையிழந்து 52 ஓட்டங்களை எடுத்தபோது மீண் டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடை நிறுத்தப்பட் டது.

மழை தொடர்ந்து நீடித்தமையால் ஆட்டம் முடிபின்றி கைவிடப்படுவதாக போட்டி நடுவர் அறிவித்தார். இதில் முரளி தரன் 3 ஓவர்கள்பந்துவீசி 6 ஓட்டங்களை மாத்திரம் கொடு த்து தென்னாபிரிக்க அணியின் குரோன்ஜே(22) குல் லின் (0) என ஆட்டமிழப்புச் செய்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**பாலா**


**முரளியின் சாதனைக் காலம் ஆரம்பம்**

முதலாவது ஒருநாள் போட்டி முடிபின்றிகை விடப் பட்ட நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மொறட்டுவ ரி.பெர்னான்டோ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையு மிழந்து 331 ஓட்டங் களை எடுத்தது. இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களை எடுத்தார்.

*(பயணிக்கும்)*

# என் விளையாட்டு-18




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

*நேற்றைய பகுதிக்கான விடை*



# வன்னி மக்களின் பாதுகாப்புக்கு...

**கேள்வி:** வன்னியிலுள்ள பொதுமக்களை வெளியேற விடாது நீங்கள்தான் தடுக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை அரசாங்கம் தொடர்ந்து கூறி வருகிறது. இதனை ஐ.நாவும் ஒரு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தியிருந்தது.

நீங்கள் சில சம்பவங்களில், வெளியேறுகின்ற பொதுமக்களை உங்கள் அமைப்பினர் சுடுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தது. இவ்வாறான விமர்சனங்களுக்கு உங்களது பதில் என்ன?

**பதில்:** எமது மக்கள் எங்களோடுதான் இருந்து வாழ விரும்புகிறார்கள். கடந்த இரண்டு வருடங்களாக இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கும்போது இரண்டு வருடங்களாக அந்த மக்கள் தொடர்ச்சியாக எங்களுடன் இருந்து எங்களுடைய சகல இன்ப துன்பங்களில் மட்டுமல்ல, போராட்டத்திலும் பங்கு கொண்டு வருகிறார்கள்.

உண்மையில் அரசும் பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்கிறது. சர்வதேச அமைப்புகளும் சர்வதேச நிறுவனங்களும் இவ்வாறான ஒருதலைப்பட்சமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இங்கே வந்து மக்களை நேரில் கண்டு கேட்டால் மக்கள் யாருடன் இருக்க விரும்புகிறார்கள் என்று தெரிந்துவிடும்.

**கேள்வி:** நீங்கள் இவ்வாறு கூறினாலும் சுமார் 35ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் போர் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப்பகுதி, வவுனியா போன்ற இடங்களுக்கு வந்திருப்பதாக அரசாங்கம் கூறுவதைப் பார்த்தால் நீங்கள் கூறுவது முழுமையான உண்மையாக இருக்க முடியாது என்று சிலர் கூறலாமல்லவா?

**பதில்:** உண்மையில் மக்களாகச் செல்லவில்லை. இராணுவ சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்ட மக்களாகத்தான், அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். உங்களுடைய வானொலிச் சேவைக்கு பலர் செவ்வி வழங்கியிருந்தார்கள்.

இவ்வாறு சுற்றிவளைப்புகளின் போது கொண்டு செல்லப்பட்ட மக்கள் அங்கே எவ்வாறான நிலையில் எவ்வாறானதொரு வாழ்க்கை நிலைமையில் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும்.

**கேள்வி:** ஐக்கிய நாடுகள் சபை விடுத்த அறிக்கையில், அவருடைய உள்நாட்டுப் பணியாளர்கள் 15 பேரை, அவர்களுடைய குடும்பத்தினரை நீங்கள் தடுத்து வைத்திருப்பதாகவும், அதில் ஒரு பணியாளரை நீங்கள் உங்கள் அமைப்பில் சேர்த்துக் கொண்டதாகவும் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** பொதுவாக எங்களுடைய இயக்கத்தில் எல்லா மக்களும் மக்களின் சகல பகுதியினரும் விரும்பி இணைவது வழக்கம். அதுவும் இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைளில் அக்கிரமங்கள் அதிகரித்து வரும்போது, குறிப்பாக இளம் சமூகத்தினர் விரைவாக எமது அமைப்பில் இணைந்து வருகிறார்கள்.

அந்த வகையில் எங்களுடைய இங்கே இருக்கின்ற மக்கள் இணைவதுபோல வேலை செய்கிற பணியாளர் யாராவது இணைந்திருக்கலாம் என்று தான் நான் நினைக்கிறேன். உண்மையில் அவ்வாறு கட்டாயமாக நாம் ஒருவரையும் எமது விடுதலை இயக்கத்தில் இணைப்பதில்லை.

அவர்களாக வந்து இணைந்தால் கட்டாயம் இணைத்துக் கொள்வோம். ஏனெனில் அவர்கள் எங்களுடைய மக்கள். அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. எங்களுடைய மக்களினுடைய விடுதலைக்காக போராடுவதற்கு ஐ.நா., செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களில் எங்களுடைய மக்களும் வேலை செய்கிறார்கள்.

கடந்த காலத்தில் அங்கே உள்ளவர்கள் எங்கள் அமைப்பில் இணைந்து போராளிகளாக இருக்கிறார்கள். நான் நினைக்கிறேன். அவ்வாறாகத்தான் அங்கே வேலை செய்த யாராவது ஒருவர் இணைந்திருக்கக் கூடும் என்று.

பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இணைந்து வருவதால் எனக்கு குறிப்பிடக் கூடியவாறு இதுபற்றி எதுவும் கூறமுடியாத நிலையில் இருக்கிறேன்.

**கேள்வி:** தற்போது இருக்கும் சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கம் பெரிதும் பின்வாங்கி இருக்கிறது. சுமார் 100 சதுரக் கிலோமீற்றர்தான் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது என இலங்கை அரசு கூறுகிறது.

இந்த சூழ்நிலையில் கொடை வழங்கும் இணைத்தலைமை நாடுகள், இந்தியா என்பன விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு இலங்கை அரசுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும், ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து ஒரு அரசியல் கட்சியாக மாறி ஒரு நிரந்தரத் தீர்வைக் காண முன்வரவேண்டும் என அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** சர்வதேச சமூகத்திற்கும் உலக நாடுகளுக்கும், எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எமது மக்கள் கடந்த காலத்தில் அகிம்சை வழியாகப் போராடி எதுவித உரிமையையும் பெறமுடியாத நிலையில் பாரிய அரச படைகளின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்தபோதுதான் நாம் ஆயுதம் தரித்த போராட்டத்தை எமது விடுதலைப் போராட்டமாக எடுத்துக் கொண்டோம்.

அவ்வாறானதொரு விடுதலை இயக்கம் எமது மக்களின் பாதுகாப்பு நிலைத்திருக்க வேண்டும். பொதுமக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும். அதில் ஒன்றுமே நிறைவேற்றப்படாமல் இவ்வாறான சூழலில் இவ்வாறான நிபந்தனைகளை இவ்வாறான கோரிக்கைகளை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**கேள்வி:** இந்திய வெளியுறவு அமைச்சர் (நேற்று முன்தினம்) நாடாளுமன்றத்தில் பொதுமக்களை அப்புறப்படுத்த இந்தியா உதவத் தயாராக இருக்கிறது என கூறியிருக்கிறார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** உண்மையில் நாமும் எமது மக்களும் எதிர்பார்ப்பது முக்கியமாக மக்கள் எதிர்பார்ப்பது உடனடியாக போரை நிறுத்துவதையே. எமது மக்கள் தொடர்ச்சியாக சர்வதேச சமூகத்தையும் இந்தியாவையும் கேட்டு வருவது உடனடியாக போரை நிறுத்தும்படி.

போரை நிறுத்துவதனூடாகத்தான் எமது மக்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம். அதைத்தான் தொடர்ச்சியாக எமது மக்கள் கேட்டு வருகிறார்கள். (ச-14)

## சென்னை...

அப்போது அவர் மீது முட்டை வீசப்பட்டது.

சட்டத்தரணிகள் சிலர் தகராறு செய்தனர். இந்தப் பிரச்சினை தொடர்பாக நீதிமன்ற உத்தரவுப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நேற்று சுப்பிரமணிய சுவாமி மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென சட்டத்தரணிகள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இது முற்றி மோதல் ஏற்பட்டது. தொடர்ந்து பொலிஸார் மீது கல் வீசப்பட்டது. இதனையடுத்து சட்டத்தரணிகள் மீது பொலிஸார் தடியடி நடத்தி விரட்டினர். சட்டத்தரணிகள் பலருக்கு மண்டை உடைந்தது.

தொடர்ந்து பல கார்கள் உடைக்கப்பட்டன. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மாலை 3 மணிமுதல் 4.30 மணிவரை இந்தப் பரபரப்பும் போராட்டமும் நடந்தது. மாலை 3 மணிக்கு ஆரம்பமாகிய பரபரப்பு தொடர்ந்து நடந்தது.

நீதிமன்ற வளாகத்திலுள்ள பொலிஸ் நிலையத்தை சட்டத்தரணிகள் தாக்கினர். அங்குள்ள பொருட்களை சூறையாடினர். மோட்டார் சைக்கிள்களுக்கும் தீவைக்கப்பட்டது.

பொலிஸ் நிலையத்திற்கும் தீ வைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ச-5)

## மின்சாரம்...

ளப்படவிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்.குடாநாடு முழுவதும் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

திருத்தவேலைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக முடிபுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பு மின்சாரம் வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

## விமானத்தின்...

விமானங்கள் தொடர்பான கைந்நூல் ஒன்றும் அவற்றை இயக்கும் முறைகள் அடங்கிய வரை படங்களும் இப்பிரதேசத் திலிருந்து படையினரால் மீட்கப்பட்டுள்ளன. இங்கு விமானங்களை உருவாக்கும் முயற்சியிலும் அவற்றை இயக்கும் பயிற்சியிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என படையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இப்பிரதேத்திலிருந்து மோட்டார் இயந்திரங்களின் பாகங்கள், அலுமினியத் தகடுகள், ஆணிகள் தயாரிக்கும் இயந்திரங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

# வன்னியில் அகோர ஷெல் வீச்சு...

பா.பவானி (வயது 38), சி.அனுஷா (வயது 22), தி.நளாயினி (வயது 33), க.நாதன் லேக்கா (வயது 16) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

ஏனையவர்களின் உடல்களை உறவினர்கள் அடக்கம் செய்துவிட்டுச் சென்ற காரணத்தினால் பெயர் விபரம் கிடைக்கப் பெறவில்லை என வன்னித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதில் வலைஞர்மடம் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

வலைஞர்மடத்தில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்றுபேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கிருஷ்ணபிள்ளை இசைக்கீரன் 8 மாதம், கிருஷ்ணபிள்ளை சயந்தன் (வயது 5), கிருஷ்ணபிள்ளை யதுர்சன் (வயது 5) ஆகிய மூவரும் சகோதரர்கள் ஆவர்.

போ.புஸ்பலதா (வயது 7), ந.கமலேஸ்வரி (வயது 26),ஜீனஸ்ரீ (வயது 19), பு.இராமசாமி (வயது 52), அ.நாகம்மா (வயது 61), யோ.அந்தோனிப்பிள்ளை (வயது 65), ச.மயூரன் (வயது 15), இ.குமுதா (வயது 26), வ.வசந்தரூபன் (வயது 28),

சி.ரத்தினம் (வயது 58), கு.விஜயசிறி (வயது 28), ச.சின்னத்தம்பி (வயது 82), ஜெ.பிலோமினா (வயது 32), அ.நீதினி (வயது 54), க.இராசேந்திரன் (வயது 32), ந.நந்தகுமாரி (வயது 30), வ.சிவராசா (வயது 50), க.துர்க்கா (வயது 12), த.பாலகுமார் (வயது 28), கு.சுரேஸ் (வயது 33), செ.சின்னம்மா (வயது 62), த.சூரியகுமார் (வயது 32),

கி.சேகர்(வயது 28), அ.விவேகானந்தன் (வயது 60), பெ.நடராசா (வயது 52),த.சக்திவேல் (வயது 32), பவானந்தி (வயது 32), மா.தியாகராசா (வயது 68), த.குகானந்தன் (வயது 36), க.கிருஷ்ணபிள்ளை (வயது 75), சி.பவானி (வயது 42), க.விமல் (வயது 30), ந.ஜெயபாலன் (வயது 30), க.சரோசினி தேவி (வயது 39),

து.கிருபாஜியினி (வயது 31), பரமேஸ்வரி (வயது 56),செல்வரஞ்சிதம் (வயது 60), தவதர்சன் (வயது 17), குமுதா (வயது 10), ஜெயரூபன் (வயது 35), மகாலிங்கம் (வயது 55), ஜெயந்தன் (வயது 23), புஸ்பமாலா (வயது 64), நிலவன் (வயது 29), குணபாலசிங்கம் (வயது 33), சு.சந்திரன் (வயது 26), சி.பிரேசன் (வயது 9), பசுமதி சுதா (வயது 26).

ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களின் பெயர் விபரம் கிடைக்கப்பெறவில்லை. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளரும் நெக்கட் பணிப்பாளருமான திருமதி சிறிகந்தராசா சாந்தி (வயது 43) இடதுகாலினை இழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பிலுள்ள பொக்கணை பகுதி மீது நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 56 பேர் காயமடைந்துள்ளனர். (ச-5)

## படையினர்...

புலிகளின் விமான உதிரிப்பாகங்கள் சிலவும் விமானங்களை தயாரிப்பதற்கான உபகரணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் ஊடக நிலையம் கூறியது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான ஊடக நிலையம் மேலும் கூறியதாவது,

புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு தெற்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, ஒட்டுச்சுட்டான் போன்ற பகுதிகளில் இரு தரப்புக்குமிடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் இனங் காணப்பட்ட இலக்குகள் மீது விமானப் படையினர் நான்கு தடவைகள் குண்டுகளை வீசி தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

விமானப் படைக்குச் சொந்தமான கிபீர் ரக விமானங்களின் மூலம் நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்கான கட்டளையிடும் அதிகாரிகள் கூடும் இடமொன்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவொன்றும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக தாக்குதலில் ஈடுபட்ட விமானப்படையினர் உறுதி செய்துள்ளனர். (ச-5)


மாணவர்களிடையே ஆத்மீக விழிப்புணர்வு
ஆளுமையை ஏற்படுத்தும் முயற்சி



சுவாமி விவேகானந்தரின்
அபிலாஷை 'ஆத்மீக தானம்'
முழுநேர கருத்தரங்கு

இடம்:- உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
திகதி:- 21.02.2009 காலை 9.30
இறை தியானத்துடன் ஆரம்பமாகும்.
தலைவர்:- திரு.மு.விக்னேஸ்வரன் (அதிபர்)

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையில் இக்கருத்தரங்கு நடைபெறுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
-செயலாளர்

(C-2136)


# மக்கள் மீதான தாக்குதலை...

நேற்றுக்காலை இலங்கை வந்துள்ள ஜோன் ஹோம்ஸ் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவை அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வன்னியில் இடம்பெறும் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரண பணிகள் மற்றும் அரசாங்கத்தின் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக வெளிவிவகார அமைச்சின் அழைப்பையேற்று ஐ.நா.பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் இலங்கை வந்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சுக்கு வருகை தந்த ஜோன் ஹோம்ஸை அமைச்சர் ரோகித போகொல்லாகம வரவேற்றார். இதனையடுத்து வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜோன் ஹோம்ஸ் உரையாற்றினார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையை அடுத்து வன்னியில் பொது மக்கள் பாரிய பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றனர். அத்துடன் பெருமளவானோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் இந்த விடயம் குறித்து அதிக அக்கறை செலுத்தியுள்ளது.

எனவே பொது மக்களுக்கான பாதிப்பை தவிர்ப்பதற்காக சர்வதேச சட்டங்களை மதித்து நடக்குமாறு தாம் இரண்டு தரப்பினரையும் கேட்டுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் வன்னியில் உள்ள மக்களை விடுவிக்க வேண்டும் என தாம் வேண்டுகோள் விடுப்பதாகவும் தப்பி வருவோர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியானதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். தமது கோரிக்கையை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபை அரசாங்கத்துடனும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும் இணைந்து இடம் பெயர்ந்த மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவுள்ளது.

இந்த நிலையில் முல்லைத்தீவுக்கு அரசாங்கம் உணவுப் பொருட்களையும் மருந்து பொருட்களையும் அனுப்பியுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை தாம் இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்து அங்கு வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களின் நலன்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து அரசாங்க அதிகாரிகளுடனும் தன்னார்வ நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமது முதல் விஜயத்தின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட முரண்பாட்டு நிலை தீர்க்கப்பட்டுள்ளதாகவும் தமக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் சுமுக உறவு நிலவுவதாகவும் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பேசுகையில்,

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வரும் மக்கள் வவுனியாவில் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வவுனியாவில் அமைக்கப்படும் குடியேற்றக் கிராமங்களில் குடியேற்றப்படுவர்.

அவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்களை அரசு வழங்கி வருகின்றது. இலங்கை வந்துள்ள ஜோன் ஹோம்ஸை இன்று வவுனியாவுக்கு செல்ல அழைத்துள்ளேன் என்றார்.

(ச-5,14)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.